காலத்திற்கு ஏற்ற
இறக்குமதிசெய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
- மணிக்கூடுகள்
- கசெட் றேடியோக்கள்
- 3 விசை மிக்சர்
- காப்பி கிறைண்டர்
- எலெக்ரோனிக் கருவிகள்

சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ ★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

# The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 21 ஜுல்ஹஜ்: 5 இதழ்: 267
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-11-78

றொஷிபா
குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
இங்களவே கையிருப்பில் உண்டு.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284

## இந்திராவா? வீரேந்திரபட்டீலா?

**சிக்மகளூர்**

கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இடைத்தேர்தலில், வாக்குகளை எண்ணும் வேலைகள் இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகிறது

எட்டு சட்டசபை தேர்தல் தொகுதிகளைக் கொண்ட இந்தப் பாராளுமன்ற தொகுதியில் 938 வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களித்தனர். வாக்குகள, ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் எண்ணப்படும் என்றும், வாக்குகளை எண்ணுவதை விரைவு படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தேர்தல் அதிகாரி நேற்று இங்கு தெரிவித்தார்.

நேற்றிரவுவரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி, வானிலை மோசமாக இருந்த போதிலும், வாக்களிப்பில் சுறுசுறுப்பு காணப்பட்டதென்றும், பெண்கள் உற்சாகத்துடன் வாக்களித்தனர் என்றும் தெரிய வந்தது.

சிக்மகளூர் இடைத்தேர்தலில் முக்கிய வேட்பாளர்களாக இந்திரா காங்கிரஸ் சார்பாக திருமதி இந்திரா காந்தியும், ஜனதா கட்சி சார்பில திரு. வீரேந்திர பட்டீலும் போட்டியிடுகின்றனா. இவர்களுடன் மேலும் 26 பேரும் களத்தில் குதித்துள்ளனர்.

சிக்மகளூர் தொகுதியின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 95 ஆயிரத்து 393 ஆகும். நடைபெற்ற இடைத்தேர்தலில் 4 லட்சத்து 53 ஆயிரத்து 068 பேர் வாக்களித்துளளனர். இவர்களில் 2 லட்சத்து 10 ஆயிரம்பேர் பெண்கள ஆவர். 76 சதவிகிதமானோர் மிகுந்த உற்சாகத்துடன் வாக்களித்திருக்கும் சிக்மகளூர் இடைத்தேர்தலில் வாக்குகள் எண்ணும் வேலைகள பத்துமணி நேரத்தில் (இன்று மாலை 6 மணியளவில்) முடிவடையும். சிக்மகளூரில் வெற்றிவாகை சூடுவது திருமதி இந்திரா காந்தியா? திரு. வீரேந்திரா பட்டீலா? என்பது இன்று இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் தெரிந்து விடும்.

பாராளுமன்றத்தில் இன்று

# பட்ஜட் மதிப்பீடு; யோசனைகள் 15-ல்

(கொழும்பு)

இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பாராளுமன்றம் கூடும்போது, நிதி திட்டமிடல் அமைச்சர் திரு.றொனி டி மெல் 1979-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைச்சமர்ப்பிப்பார்.

புதிய வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை எவ்வளவு என்பதை நிதிஅமைச்சர் இன்று தெரிவிப்பார்.

துண்டுவிழும் தொகை எவ்விதமாகச் சரிக்கட்டப்படும், புதியவரி விகிதங்கள், விலை உயர்வு என்ன? அரசாங்க தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உண்டா? உண்டென்றால் எவ்வளவு—

இதுபோன்ற 'பட்ஜட்' யோசனைகளை இம்மாதம் பதினைந்தாம் திகதி பாராளுமன்றத்தில் தமது வரவுசெலவுத் திட்ட உரையில் நிதி, திட்டமிடல் அமைச்சர் விபரமாகத் தெரிவிப்பார்.

கட்சிமாறினால் பதவிபறிபோகும்

# அரசியல்சட்டத்தில் திருத்தம் இல்லை!

## தேவநாயகம் கருத்து

(கொழும்பு)

கட்சிவிட்டுக் கட்சி மாறுபவர்களைத் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க அனுமதிக்கும் வகையில் அரசியல் அமைப்புத் திட்டத்தில் திருத்தம் செய்யப்படமாட்டாது என்று நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கருத்துவெளியிட்டுள்ளார்.

தற்போது அங்கம் வகிக்கும் கட்சியிலிருந்து எம். பி. ஒருவர் விலகும் அல்லது விலக்கப்படும் பட்சத்தில் அவர் தாமாகவே பதவி இழந்துவிடுவார். அவருக்குப்பதிலாக புதிதாக ஒருவரை குறிப்பிட்ட கட்சியே பாராளுமன்றத்திற்கு நியமிக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழர் கூட்டணி எம். பிக்கள் இருவர் அரசாங்கத்தில் சேர இருப்பதாக ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தன இந்தியாவில் கூறியிருந்ததை அடுத்து அரசியல் அமைப்புத் திட்டத்தில் மாற்றம் ஏற்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அரசியல் வட்டாரத்தில் ஊகம் தெரிவிக்கப்பட்டதே யொழிய, அரசியல் அமைப்புத் திட்டத்தில் மாற்றம்செய்வதுபற்றி அரசு சிந்திக்கவில்லை என்றும் திரு. தேவநாயகம் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முதல்நாள் கட்சிமாறிய சுதந்திரக்கட்சி எம் பி. திரு ஆர், ஜி சமரநாயக்கா விஷயத்தில் ''எதுவித கேள்விக்கும்'' இடமில்லை என்றும் அமைச்சர் கூறினார்,

திரு. சமரநாயக்கா அரசியல் அமைப்பு அமுலுக்கு வருமுன்னரே கட்சி மாறிவிட்டார் என்றும் திரு. தேவநாயகம் கூறினார். (இ)

புங்குடுதீவில் மட்டும்

## 300 குடும்பங்களுக்கு தலா ரூ. 500 நஷ்டஈடு

### நிலைமையை நேரில் அவதானித்த அரசாங்க அதிபர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடங்களை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவும் சமூக சேவைகள் பகுதி இயக்குநர் திரு கெங்காதரனும் நேற்று நேரில் பார்வையிட்டனர்.

புங்குடுதீவில் புயல், வெள்ளத்தால் வீடிழந்த 300 குடும்பங்களின் நிலையை நேரில் அவதானித்த அரசாங்க அதிபர் தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழு ஒன்றினை அங்கு உடனடியாக அனுப்பி வைத்தார்.

இக் குடும்பங்களுக்கு தலா

[8ம் பக்கம் பார்க்க]

## நேபாளத்துக்கு இலங்கை நிபுணர் ஆலோசனை

காட்மாண்டு. நவ, 6

இலங்கை விவசாய, நீர்ப்பாசன நிபுணர்களின் ஆலோசனை நேபாளத்துக்குக் கிடைக்க இருக்கிறது.

இத்தகவலை இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன காட்மாண்டுவில்பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி திரு ஜெ ஆர். ஜெயவர்த்தனவுக்கும் நேபாள மன்னா பிரேந்திராவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இலங்கையின் விவசாய நீர்ப்பாசன நிபுணர்களின் ஆலோசனையை நேபாளத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை நிபுணர்களின் ஆலோசனையை நேபாளத்துக்கு வழங்குவது குறித்துத் தாம் பெருமகிழ்ச்சி அடைவதாகவும் திரு ஜெயவர்த்தன பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (இ)

# மூதூரில் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நாசம்!

(மூதூர்)

மூதூரில் கடும்மழை காரணமாக ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தினால் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் நாசமாகியுள்ளது.

பலவீடுகள் சேதமடைந்துள்ளன.

போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர் வெளிப்பகுதியில் 5 முதல் 6 அடி வெள்ளம் நிற்கிறது

பெருந்தொகையான கால்நடைகளும் கோழிகளும் மடிந்துள்ளன.

மூதூரில் கடந்த 29ம் திகதி முதல் இடைவிடாது தொடர்ந்து மழை பெய்ததால் இப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2ம்திகதி இரவு சுமார் 8 அளவில் இப்பகுதி மக்களைத் திகிலுறச் செய்யும் வகையில் வீசிய பயங்கரப் புயல்காற்றுடன் பேய் மழையும் பெய்ததால் மூதூர்ப் பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

வான்பயிர்கள், பெருமரங்கள் முதலியன முறிந்து விழுந்ததில் குடிசை வீடுகள் முதல் கொண்டு கல்வீடுகளும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

மூதூரெங்கும் ஒரேவெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றது.

### 6 அடி தண்ணீர்

திருமலை மட்டுநகர் வீதியில் மூதூர் 66ம் கட்டை முதல் 64ம் கட்டைவரை வீதி மட்டத்தில் மாத்திரம் 3 அடி தண்ணீர் தேங்கிநிற்கின்றது. மூதூர் வெளிப்பகுதியில் 5 அடி தண்ணீரும் வேத்தீவு ஒட்டுமல்லிகைத்தீவு, தோப்பூர் போன்ற பகுதிகளில் 4 அடி தண்ணீரும் பரவியுள்

(8-ம் பக்கம் பார்க்க)

## மராட்டிய கவிஞருக்கு நேரு விருது

புதுடில்லி, அக். 6

1977-ம் ஆண்டுக்குரிய நேரு இலக்கிய விருது, மராட்டிய கவிஞர் திரு. ஆத்மராவ் தேஷ்பாண்டேக்கு இன்று வழங்கப்பட்டது.

## ஈரானில் இராணுவ அரசு

தெஹ்ரான், அக். 6

ஈரானிய மன்னர் ஷா, புதிய இராணுவ அரசாங்கமொன்றை இன்று நியமித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்த சிவில் அரசாங்கத்தைத் தொடர்ந்து வன்செயல்கள் இங்கு மோசமடைந்ததைத் தொடர்ந்தே இராணுவப்படைத் தலைமையதிகாரி தலைமையிலான புதிய இராணுவ அரசு இங்குவந்துள்ளது.

# வடபகுதியில் தென்னிந்திய கோவில் ஆதனங்கள்

## அரசாங்க அதிபர் விபரம் திரட்டுகிருர்

(உடுப்பிட்டி)

வடபகுதியில் உள்ள தென்னிந்தியக் கோவில்களுக்குச் சொந்தமான தருமஆதீனக் காணிகள் பற்றிய விபரங்களைத் திரட்டும் முயற்சியில் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னுண்டோ ஈடுபட்டுள்ளார்.

பிரஸ்தாப காணிகள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்காக யாழ். அரசாங்க அதிபரினுல் விடுக்கப்பட்ட பணிப்புரையைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க பிரிவு ரீதியாகக் கிராமசேவை உத்தியோகத்தர்களின் மூலம் தருமஆதீனக் காணிகள் சம்பந்தமான பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது

வடபகுதியில் தென்னிந்தியக் கோவில்களுக்குச சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சிதறிக்கிடப்பதாகவும் அவற்றில் சில ஆதீனச் சபைகளினுலும், தனியாரிகளின் பொறுப்பிலும் இருந்து வருகின்றன என்றும் தற்போது இக் காணிகளில் சிலர் குடியேறியதால் இவர்களுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும் இடையில் உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

---

## ஐ. நா. தினப் பேச்சுப் போட்டி

(புலோலி)

யாழ். மாவட்ட ஐ நா. தினத்தையொட்டி கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட ஆண்களுக்கான தமிழ் பேச்சுப் போட்டியில் மகாஜனுக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் பாலபாஸ்கரன் 1ம் இடத்தைப் பெற்ருர்.

பெண்களுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டியில் நடேஸ்வராக்கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி ராஜரட்ணம் முதலாம் இடத்தையும் ஆண்களுக்கான ஆங்கில பேச்சுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் எஸ் ஜி. கிருபாகரன் முதலாம் இடத்தையும் பெண்களுக்கான ஆங்கிலப் பேச்சுப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி செல்வி சந்திரிகா பாலகிருஷ்ணன் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (உ)

---

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச்சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் கட்டணப் பணம் 4 ரூபாவிலிருந்து 10 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது இதன் மூலம் வைப்பு நிதியை ஸ்திரப்படுத்தச் சகாயமாக ஒவ்வொரு 10 ரூபாவுக்கும் 20 ரூபாவாக வழங்கப்படும். சங்கம் இதுபற்றி ஆலோசிப்பதற்காக விசேஷமாகக் கூடிய பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு து. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது

இப்புதிய மாற்றத்தைப் பாராட்டிப் பலரும் பேசினர்

புதிய தலைவர் திரு விசுவநாதன் நீண்டகாலம் இவ் வித சங்கங்களுடன் தொடர்புடையவர் என்றும் அவரது ஆழமான சிந்தனையின் பயனுக இத்திட்டம் தயாரிக்கப்பட்டதென்றும் மற்றச் சங்கங்களையும் விட இத்திட்டம் உறுப்பினர்களுக்கு அதிக லாபமளிக்குமென்றும் சங்கச் செயலாளர் திரு சே. சிவராசா தமது பேச்சில் குறிப்பிட்டுள்ளார். (அ)

---

## "கல்லூரி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்"

### பெ. ஆ. சங்கங்களுக்கு வித்தியாதிபதி கோரிக்கை

(நீர்வேலி)

"கல்லூரிகளின் முன்னேற்றத்திற்கு பெற்ருேர்—ஆசிரியர் சங்கமே பெரும் உதவியாக இருக்கவேண்டும்" என்று வடமாநில வித்தியாதிபதி திரு, தி. மாணிக்கவாசகர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினுர்.

கல்லூரி அதிபர் பிரமஸ்ரீ ப. சுவாமிநாத சர்மா விழாவுக்குத் தலைமைவகித்தார்.

திரு. மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"உலகமெலாம்தமிழோசை பரவவேண்டுமென்னும் பெரு நோக்குடன் கல்லூரி அமைத்தவர் முதலியார் அத்தியார் அருணுசலம் என்ருல் மிகையாகாது. கல்லூரி மேன்மேலும் வளர பெற்ருர், பழைய மாணவர், ஆசிரியர்களுக்கிடையில் சமாதானம, ஒற்றுமை நிலவவேண்டும். சமூக மாற்றங்களுக்கு கல்விச் சாலைகளே களமாக அமையவேண்டும்."

திருமதி ஞானம் பிகை மாணிக்கவாசகர் பரிசில்கள் வழங்கினுர். கல்லூரிஆசிரியை பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினுர். (உ)

---

## சுங்கப்பகுதி திருட்டு:

## 9பேருக்கும் 9-ம் திகதிவரை விளக்க மறியல்

(புலோலி)

கடந்த ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி பருத்தித்துறை சுங்கஇலாகா பகுதியில் களவாடப்பட்ட ரூபா 25,728 பெறுமதியான பொருட்களின் ஒரு பகுதி பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகராவுக்கு கிடைத்த தகவலையடுத்து மீட்கப்பட்டுள்ளது.

சுழல் துப்பாக்கி, தோட்டாக்கள் உட்பட பலபொருட்களை மீட்ட பொலிசார் சந்தேகத்தின்பேரில், செல்லையா இந்திரலிங்கம், கோபால பிள்ளை ஜீவராசா, சுப்பிரமணியம் விசுவலிங்கம், முகம்மது இஸ்மாயில் ஜெய்னுதீன், யோசப் யேசுராஜா, மடத்தின் அந்தோனிப்பிள்ளை, சிற்றம்பலம் யோகராசா, முத்தையா கமலநாதன், தணிகாசலம் கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஒன்பது பேரையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இந்த ஒன்பது பேரும் பருத்தித்துறை நீதிபதி திரு. சே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான திரு மு சிவசிதம்பரம் சந்தேகநபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குப்படி வாதாடினுர்.

பொலிசார் சார்பில் ஆஜரான சார்ஜன்ட் திரு. எஸ். மாணிக்கராஜா பல காரணங்களை எடுத்துக்கூறிச் சந்தேகநபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டாமென நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்

சந்தேகநபர்களை இந்த மாதம் 9ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் பொலிசார் இச் சந்தேகநபர்கள் பற்றிய விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை அத் திகதி வரை ஒத்திவைத்தார். (உ)

---

## புதிய பஸ்சேவை: மாவட்ட மந்திரி ஏற்பாடு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரும், பொத்துவில் இரண்டாவது எம் பியுமான திரு. எம். கனகரத்தினத்தின் முயற்சியால் பிரசித்தி பெற்ற தலமான உகந்தை மலைக்கு புதிதாக பஸ்சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று இ. போ. ச. டிப்போவினுல் இச்சேவை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்படும் இச்சேவை விரைவில் மட்டக்களப்பிலிருந்தும் ஆரம்பிக்கப்படுமென்று தெரியவருகின்றது. [உ]

---

## சின்ன ஊறணி கி. அ. இயக்கம்

[மட்டக்களப்பு]

மண்முனை வடக்குப் பிரிவு சின்ன ஊறணி கிராம அபிவிருத்தி இயக்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மேற்படி உத்தியோகத்தர் திரு. வி. சித்திரவேலு தலைமையில் நடைபெற்றது,

திருவாளர்கள் மு. இராசநாயகம் ஆசிரியர் தலைவராகவும், பூ. கந்தசாமி உப தலைவராகவும், மா. கந்தசாமி செயலாளராகவும், செ. தர்மராசா உப செயலாளராகவும், அ. ஆரியரெத்தினம் கணக்குப் பரிசோதகராகவும் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். [உ]

---

## ஊரடங்குச் சட்டம்

புதுடில்லி, நவ. 6

புதுடில்லியில் அகாலிதளக் கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற மோதலை அடுத்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. (இ)

---

## எம். எல். பெரேராவுக்கு அஞ்சலி

## "மயிலிட்டித்துறைமுக அபிவிருத்திக்குஉழைத்தவர்

(யாழ்ப்பாணம்)

"கடமை உணர்ச்சியும் நிர்வாகத் திறமையும் கொண்ட அமரர் எம். எல். பெரேரா இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் சாதாரண மேற்பார்வையாளராக இருந்து படிப்படியாகப் பதவி உயர்ச்சி பெற்று இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தில் நிர்வாகப் பொது முகாமையாளராகக் சடமையாற்றினுர். இவரது நிர்வாக காலத்தில் மயிலிட்டித் துறைமுகவேலைகள் துரித கதியில் முன்னேற்றமடைந்தன"

இவ்வாறு இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பொது முகாமையாளராகக் கடமையாற்றி காலமான திரு. எம். எல். பெரேராவின் அஞ்சலிக் கூட்டத்திற்கு. மயிலிட்டி அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பொறுப்பதிகாரி திரு. லலித் பெர்ஞண்டோ பேசுகையில் குறிப்பிட்டார். இவ்வஞ்சலிக்கூட்டம் மயிலிட்டியில் நடைபெற்றது. மற்றும் பாதுகாப்பு அதிகாரி திரு. எம் ஜெகநாதன் உட்படப் பலர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

திரு. பெரேராவின் தகனக் கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன. இதனையொட்டி மயிலிட்டி அரச பொறியியல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நேற்று பொதுவிடுமுறை வழங்கப்பட்டது. (ஈ)

---

# விளையாட்டுச் செய்திகள்

### உரும்பராய் இந்து வெற்றி

(யாழ் விளையாட்டு நிருபர்)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் உரும்பிராய் இந்துக்கல்லூரிக்குமிடையே நடந்தசிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் பிரிவுப் போட்டியில் இரண்டு கோஷ்டிகளும் 1-1 கோல்களைப் போட்டு போட்டியைச் சமமாக முடித்துக்கொண்டன.

மூன்றும் பிரிவுப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி 3-1 கோல்களால் வெற்றியீட்டியது

இவ்விரு போட்டிகளும் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்தன இதற்கு திரு. நடேசு, திரு ஏ. கமலநாதன் ஆகியோர் நடுவர்களாகக் கடமை புரிந்தார்கள். (உ)

### மகாஜனு வெற்றி

தெல்லிப்பளை மகாஜனுக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 2-ம், 3-ம், பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டிகளில் 2 போட்டிகளிலும் மகாஜனுக் கல்லூரி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிகள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இதற்கு திரு. கே. தனபாலசிங்கம், திரு. ஆர். தங்கராசா ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

### சம்பத்திரிசியார் வெற்றி

யாழ் சம்பத்திரியார் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 1ம் பிரிவில் சம்பந்திரியார் கல்லூரி 5-1 கோல்களால் வெற்றிபெற்றது.

2வது பிரிவில் சம்பத்திரிசியார் கல்லூரி 3-2கோல்களால் வெற்றியீட்டியது,

3-வது பிரிவில் இருகோஷ்டிகளும் 1-1 கோல்களைட்போட்டிருந்தபடியால் போட்டி சமமாகவே முடிவுற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். சம்பத்திரியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இப்போட்டிகளுக்கு முறையே திரு ரி. ரெட்ணசிங்கம், எஸ் அமிர்தநாதர், ஏ. குணரெட்ணம் ஆகியோர் நடுவர்களாகக் கடமைபுரிந்தனர்

### பாஷையூர் வெற்றி

பரியோவான் கல்லூரிக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலானசிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாம் பிரிவுப்போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம் 4-2 கோல்களால் வெற்றியீட்டியது.

2ம்பிரிவில் சென் அன்ரனிஸ் கழகம் 4-0 கோல்களால் வெற்றி பெற்றது.

திரு ம. நவீனன், திரு ஏ. தனபால ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

### பாடும் மீன் வெற்றி

ஜெற் ஊன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பாடுமீன் 2ம் பிரிவிற்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 4-1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி யாழ். கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (உ)

### நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி

யாழ். உதைபந்தாட்ட லீக் சம்பியன் நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டிக்கும் கிளிநொச்சி லீக் சாம்பியன் யங்பேட்ஸ் கோஷ்டிக்கும் கிளிநொச்சி ரேஃட்றி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் சென். மேரிஸ் கோஷ்டி 10-0 கோல்களால் வெற்றிபெற்றது.

ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை ஆட்டம் விறுவிறுப்பாகவே இருந்தது. யங்பேர்ட்ஸ் கோஷ்டிக்கு திரு. ஞானராசா தலைமை தாங்கினுர். சென்மேரிஸ் கோஷ்டிக்கு திரு மகேந்திரன் தலைமை தாங்கினுர்.

சென் மேரிஸ் வீரர்கள் இடைவேளைக்கு முன் 6 கோல்களையும் இடைவேளையின்பின் 4 கோல்களையும் போட்டனர். இப்போட்டிக்கு என். ஆர். தவரெட்ணம்மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (இ)

---

## பெற்ருேர் தினம்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தவணை ஒன்றுக்கு ஒரு நாளை பெற்ருேர்தினமாகஅனுசரிக்குமாறு கல்வியமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகம், நடைமுறைகளில் பெற்ருேர்களையும் பாதுகாவலர்களையும் பங்குகொள்ளச்செய்யும் நோக்குடனேயே கல்வியமைச்சர் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளார். (இ)

ஈழநாடு
The Eelanaadu

## புலவர்மணிக்கு நன்றிக்கடன்

இலங்கையின் தற்கால தமிழ்ப் பேரறிஞர்களைப் பற்றி யாராவது சிந்திக்க முனைவார்களானல், அந்தச்சிந்தனையில் பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளையவர்களும், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்களும் உயர்ந்த இடத்தைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒருவர் வடக்கிலும், மற்றவர் கிழக்கிலும் தோன்றியவர்கள்.

இவ்விரு பெரியார்களும் தமது அருந்தமிழ்த் தொண்டின் காரணமாக வடக்கையும் கிழக்கையும் மாத்திரமன்றி தமிழ் அறிவுத்துறை முழுவதையுமே இணைக்கும் பாலமாக விளங்கிவந்துள்ளார்கள்.

தமிழ்மொழியும், தமிழ்ப் பண்பாடுகளும் இம்மாதிரியான பெருமக்களின் அரிய தொண்டுகளின் காரணமாகவே காலத்துக்குக் காலம் புதுமைபெற்றும், பொலிவுபெற்றும் வளர்ந்து வந்துள்ளன.

ஆனல் இந்தப் பெரியார்களில் ஒருவரான புலவர்மணி அவர்கள் கடந்த இரண்டாம் திகதி இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கிய செய்தி தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதையுமே சோகக் கடலில் ஆழ்த்திவிட்டது.

அரும்பெரும் தமிழ்-சமய நூல்களை எழுதிய இப்பெரியார் கிழக்கிலங்கையின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து வந்தார்.

இப்பெரியாருக்கும் இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்படவேண்டும் என்பது கிழக்கிலங்கை மக்களின் வேணவாவாக இருந்துவந்தது கிழக்கிலங்கை மக்கள் மாத்திரமன்றி இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவருமே அதனை மனமுவந்து வரவேற்கச்சித்தமாய் இருந்தார்கள் என்றுலும் அந்த விருதுகிடைப்பதற்குமுன்னதாகவே அவர் பரமபதம் அடையநேர்ந்துவிட்டது

என்றுலும் அந்தப் பெரியாருக்கு உரிய மதிப்பையும் கௌரவத்தையும் மறைந்த பின்பாயினும் வழங்குவதற்குக் காலம்கடந்துவிடவில்லை.

இதுபற்றிப் பதவியிலிருக்கும் தமிழ்த் தலைவர்கள் ஆலோசிக்கவேண்டும்.

தமிழுக்காகவும், தமிழ்ச் சமுதாயத்துக்காகவும் வாழ்ந்து மறைந்த இப்பெரியாரதும் இவர்போன்றவர்களதும் எழுத்துச்சுவடிகளையும், ஏனைய சின்னங்களையும் தேசிய பொக்கிஷங்களாகப் பேணிப்பாதுகாப்பதற்கு வழிசெய்யவேண்டும்.

அவ்வாறு செய்யின் இப்பெரியார்களின் பணிகள் பற்றிய சிந்தனை வருங்காலத்திலும் நிலைத்துநிற்கமுடியும் என்பதுடன் அதுவே அப்பெரியார்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகவுமிருக்கும் என்று கருதுகின்றேம்.

### மணிவாக்கு


கடவுள் அருவமாய் அனைத்திலும் இருக்கிறூர் என்ற கருத்துத்தான் நீதிநியதிகளுக்கு அடிப்படையாக இருக்கிறது.

— விவேகானந்தர்

## இன்று நல்லையில் திருக்கல்யாணம்

# தெய்வத்திருக்கல்யாணம் உணர்த்தும் பொருளென்ன?

-- செ. இரத்தினசபாபதி --



இன்று செவ்வாய்க்கிழமை 7-11-78, பிற்பகல் ஆறு மணியளவில் நல்லூரில் திருமுருகனுக்கு ஒரு பெருவிழா — சூரனைச் சங்காரம் செய்து, சேவலும் மயிலுமாகக் கொண்டருளிய பிறகு, ஆறுமுகனுக்கு இரு தேவிமாரும் மலர்மாலை சூடும் தெய்வத்திருமணம். இதை எழுதும்போது —

> ''ஆயிரம் மலர் எடுத்து
> அழகனுக்கு மாலையிட்டு''
>
> ''சிவகாமி மடிமீது
> விளையாடும் அழகன்''
>
> தினை தந்த வள்ளி
> சிறுமிக்கும் இனியன்''

என்று சூலமங்கலம் சகோதரிகள் பாடியது என் மனதைக் கவர்ந்த பாட்டுக்கள் என் நெஞ்சில் ஒலிக்கின்றன.

### திருக்கல்யாண வைபவம்

இன்று மாலை ஆறு மணியளவில் நல்லூரில் ஆகம விதி வழுவாது திருமண வைபவம் கிரியா மந்திர பாவனைகளுடன் ஆரம்பமாகி மாங்கலிய தாரணமானதும், வள்ளிதேவசேனசமேத சிவசண்முகப் பெருமான் பூந்தண்டிகையில் இனிய மங்கள வாத்திய இசையுடன் வெளிவீதி பவனி வந்தபின் திருக்கல்யாண வைபவம் பூர்த்தியாகும்.

### கடவுளுக்கும் திருமணமா?

'கடவுளுக்கும் திருமணமா, அவருக்கும் மனைவிதேவையா?' என்ற ஐயம் எம்மனதில் ஏற்படுவதுண்டு. இந்த ஐயத்தைப் பற்றித் 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா முருகவேள் அவர்கள் தமது சஞ்சிகையில் 'வள்ளிதெய்வயானை' என்ற கட்டுரையில் நல்ல தொரு விளக்கம் தந்திருக்கிறார்கள். இவ்விளக்கத்தை வாசகர்கள் அறியும் பொருட்டு அப்படியே இங்கு தருகிறேன்.

### ஐயமும் விடையும்

''தெய்வயானையம்மை திருமணம், வள்ளியம்மை திருமணம் பற்றி ஆராயுங்கால நம்மிற் பலருக்குக் கடவுளும் திருமணம் செய்துகொள்ளுவாரா! கடவுளுக்கும் மனைவி தேவையா? என்பன போன்ற பல ஐயப்பாடுகள் ஏற்படுவதுண்டு. இத்தகைய ஐயப்பாடுகள் தொன்று தொட்டே நிகழ்ந்துகொண்டு வந்துள்ளன எனத் தெரிகின்றது.

''மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பகுதியில் 'மலையரசனின் மகளாகிய பார்வதியைச் சிவபெருமான் உலகறியும்படி திருமணம் செய்துகொண்டான்' என்பது எற்றுக்கு என்று ஒருத்தி வினவ; அதற்கு மற்றொருத்தி அங்ஙனம் சிவபெருமான் செய்து காட்டாமல் போயிருப்பின், அவன் கலைகளில் நவின்றருளிச் செய்த பொருள்களையெல்லாம் அறிந்துகொள்ள இயலாமல் உலகனைத்தும் கலங்கித் தடுமாறிப் போயிருக்கும். வையத்து வாழ்வாங்கு வாழும் முறைகளைக் கலை நூல்களில் வகுத்துக் கூறியருளிய இறைவனே அங்ஙனம்தான் கூறியனவற்றைத் தானே நடத்திக் காட்டியும் அவற்றை நமக்கு விளக்கித் தெளிவு செய்தருளினுன். சொல்லொன்றும் செயலொன்றுமாய்த் திரியும் நம்மைப் போலஅன்றித் தான் சொல்லியவற்றைத் தானே கடைப்பிடித்து நம்பொருட்டு நடந்து காட்டியருளினன் இறைவன்' என விடை கூறுவதாக.

> மலையரையன் பொற்பாவை
> வாள்நுதலாள் பெண்
> திருவை
> உலகறியத் தீவேட்டான்
> என்னுமது என்னேடி?
> உலகறியத் தீவேளாது
> ஒழிந்தனனேல் உலகனைத்தும்
> கலைநவின்ற பொருள்
> களெல்லாம்
> கலங்கிடுங்காண் சாழலோ!

என்னும் இனிய திருப்பாடல் அமைந்திருத்தல் சிந்தித்துணரற்பாலது.'' (அ)

## "அம்பிகை நலன்புரிக்குழு"

(வேலணை)

வேலணை கிழக்கு பெருங்களம் முத்துமாரி அம்மன் கோவிலடி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்கென அம்பிகை நலன்புரிக் குழு என்ற ஓர் குழுவை தற்காலிக தலைவர் செல்வன் கந்தவனம் சந்திரசேகரம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்திருக்கின்றனர்.

இக்குழுவின் போஷகர்களாக திருவாளர்கள் தி. இரத்தினம், பொன். தியாகராஜா, சி. முத்துத்தம்பி, பொன். அமிர்தலிங்கமும், தலைவராக: க. சந்திரசேகரம், உபதலைவராக பெ. நவரத்தினம். செயலாளராக கு. விக்கினராஜா உபசெயலாளராக ந. சிவராஜா. தனாதிகாரியாக ஏ. சிவலிங்கமும் தெரிவாகினர். மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [உ]

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 21ந் திகதி

செவ்வாய்க்கிழமை

(7-11-78)

**மேடம்:-** ஆக்கட்பணிகளில் ஈடுபடுவீர்கள், பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், தாய்வழி மூலம் நற்செய்தியும் கிடைக்கலாம்.

**இடபம்:-** குடும்பத்தில் புத்திரர்களால் மகிழ்ச்சிக்கிடமுண்டு, அறவழியில் நாட்டம் பிறக்கும், மகிழ்ச்சிகரமான தினம்.

**மிதுனம்:-** அதிகாரக் குறைவுக்கிடமுண்டு, அபாய காரியங்களில் பங்கு பற்றுபவர் அவதானம் வேண்டும், அவசர நடவடிக்கையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**கடகம்:-** களஸ்திர வழியால் மகிழ்ச்சிக் கிடமுண்டு, காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும், சுகபோக நாள்.

**சிங்கம்:-** செய் தொழிலில் தளர்ச்சி ஏற்படும், சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர், பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

**கன்னி:-** பிதாவழி ஆதரவு கிடைக்கும், பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள், தெய்வநம்பிக்கை நன்று.

**துலாம்:** தொழில்துறையில் வருமானத்திற்கிடமுண்டு சிலருக்கு இடமாற்றமும் கிடைக்கலாம், வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:-** மெத்தவும் பொருள் சேரும், பெரியோர் ஆதரவும் உண்டு, தித்திக்கும் செய்தியுடன் தேனன வாழ்வும் உண்டு.

**தனுசு:-** கருடப்பார்வை உங்களை வட்டமிடும், எதிர்பாராத வகையில் பொருட் செலவுக்கு இடமுண்டு, அதிக சிந்தனைக்கு இடமுண்டு.

**மகரம்:-** சுறுசுறுப்பு குன்றும், குடும்பத்தில் பூசல்கள் தோன்றி மறையும், கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும், அடக்கம் நன்று.

**கும்பம்:-** பேச்சுவன்மையால் பெரும் புகழ் அடைவர். வரவிலும் உயர்வு காணும், சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கும்.

**மீனம்:-** உதவி செய்யப் போய் உபத்திரவத்தை தேடிக் கொள்வீர்கள். அரச பயத்திற்கு இடமேற்படும், நிதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை ஐ. வேலுப்பிள்ளை

## வவுணதீவு சமூக சேவைகள் இயக்கம்

[மட்டக்களப்பு]

வவுணதீவில் சமூக சேவைகள் இயக்கம் என்ற பெயரில் புதிய இயக்கமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. கா. செல்வரெத்தினம், உப தலைவர்: திரு. செ. அழகரெத்தினம், செயலாளர்: திரு. வீ. செல்வநாயகம், உப காரியதரிசி: திரு. க. கந்தசாமி, தனாதிகாரி: திரு. சி. கனகசிங்கம், ]உ[

## புள்ளி விபரங்கள்

சோவியத் உதவி சம்பந்தமாக உலகின் 78 நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் பட்டுள்ளன.

1976ல், சோவியத் யூனியனின் தொழில் நுட்ப உதவியுடன் 670க்கு மேற்பட்ட திட்ட நிலையங்கள் கட்டப்பட்டன அல்லது விஸ்தரிக்கப்பட்டன. 1976 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, வெளிநாடுகளில் கட்டப்படும் திட்ட நிலையங்களுக்கு முழு ஆலைகளை ஏற்றுமதி செய்வது சுமார் 21சதவிகிதம் அதிகரித்து, 181 கோடி 70 லட்சம் ரூபிளை எட்டிற்று.

1977ல், சோவியத் யூனியனின் பொருளாதார, தொழில் நுட்ப உதவியுடன் 130 தொழில் நிலையங்களும், பட்டறைகளும், இதர திட்ட நிலையங்களும் கட்டிமுடிந்து இயங்க ஆரம்பித்தன. இதே ஆண்டில், அயல் நாடுகளுக்கு சோவியத் உதவி சம்பந்தமாக கிட்டத்தட்ட 90 அரசாங்க ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கையெழுத்தாயின.

தற்போது சோவியத் யூனியன் 118 நாடுகளுடன் வர்த்தக உறவுகள் கொண்டுள்ளது.

யுத்த முற்காலத்துடன் ஒப்பிடுகையில், சோவியத் அயல் வர்த்தகம் நிலையான விலைகளில் 30மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் (1976-1980) அயல் வர்த்தகப் பரிமாணத்தை 30-35 சத விகிதம் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது

## புள்ளி விபரங்கள்

சோவியத் யூனியனில் 89 மொழிகளில் புத்தகங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

1918 க்கும் 1977 க்கும் இடையே சோவியத் எழுத்தாளர்களும் அயல் நாட்டு எழுத்தாளர்களும் எழுதிய நவீன கதைகளும், நாவல்களும், பண்டைய இலக்கியங்களும் மொத்தம் 1,200 கோடி பிரதிகள் வெளியிடப்பட்டன.

1976ல், சோவியத் யூனியனைச் சேர்ந்த 1,295 பொருட்காட்சிக் கூடங்களுக்கு 13 கோடி 50 லட்சம் பேர் வருகை தந்தனர்.

சோவியத் யூனியனில் வரலாற்றுச் சிறப்பும், கட்டிடக் கலைச்சிறப்பும், தொல்பொருள் ஆராய்ச்சிச் சிறப்பும் மிக்க 1,50,000 நினைவுச் சின்னங்கள் உள்ளன.

சோவியத் யூனியனில் 570 தொழில் முறை நாடகக் குழுக்கள் இருக்கின்றன, நாடக மன்றங்கள் சோவியத் யூனியனது பல்வேறு தேசிய இன மக்களின் 47மொழிகளில் நாடகங்களை அரங்கேற்றுகின்றன.

சோவியத் யூனியனில் 450 கோடி புத்தகங்கள் கொண்ட 3,50,000 நூலகங்கள் உள்ளன. இவற்றில் 1.31,000 நூலகங்கள் பொது நூலகங்களாகும்.

இவற்றை 20 கோடிக்கு அதிகமான வாசகர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

### சோவியத்யூனியனில்

## வீட்டுவசதி உரிமை எவ்வாறு உத்தரவாதம் செய்யப்படுகிறது?

வளர்ச்சியுற்ற சோஷலிச நாடு சோவியத்யூனியன், வீட்டுவசதி நிர்மாணத்தின் அளவிலும், வேகத்திலும் உலகில் அது ஈடு இணையற்றவீட்டு வசதி நிர்மாணத்தைஒரு கேந்திரமான கடமை என்று கருதி அரசு அதற்கு அதிக கவனம் செலுத்துகின்றது.

வீட்டுவசதி பெறுவதற்குள்ள ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த உரிமையை உலகில் முதல் முதலாக சட்டபூர்வமாக்கியதும், இந்த உரிமையை உறுதிப்படுத்துகின்ற திட்டவட்டமான அரசியல், பொருளாதார, சட்ட உத்தரவாதங்களைக் கொண்டுள்ளதுமான அரசியல் சட்டங்களில் ஒன்று 1977ம் வருடத்திய சோவியத் அரசியல் சட்டமாகும். இந்த உத்தரவாதங்கள் எவ்வாறு செயலாக்கப்படுகின்றன?

வீட்டுவசதி உரிமையை எய்துவதற்கு பொருளாதாரப் பாதுகாப்புகளும் காரணமாக இருந்து வருகின்றன. இந்தப்பாதுகாப்புகள் அரசு மேலும் மேலும் வீடுகளைக் கட்டுவதற்கு வகைசெய்கிறது,

இந்த நோக்கத்திற்காக, அரசாங்கம் இலவச துண்டு நிலங்களை வழங்குகிறது. தனது பட்ஜெட்டிலிருந்து அல்லது தொழில்துறை மற்றும் பிற நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைக் கொண்டு கட்டட நிர்மாணத்திற்கு நிதி வழங்குகிறது. சமூக-பொழுதுபோக்கு நிதிகளிலிருந்தும், வீட்டுவசதி நிதிகளிலிருந்தும் புதிய வீடுகள் கட்டுவதற்காக நிதிகள் தனிப்பட்ட முறையில் வீடு கட்டிக்கொள்வோரை ஐக்கியப்படுத்தும் வீட்டுவசதிக் கூட்டுறவுகளில் சேர்ந்துகொள்வதற்கான உரிமை சோவியத் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டது: இத்தகைய கூட்டுறவுகள் ஒன்றுஅல்லது மேற்பட்ட குடித்தனப் பகுதிகளைக் கொண்ட வீடுகளைக் கட்டுவதற்கு பணத்தையும் முயற்சிகளையும் ஒன்றுகத் திரட்டுகின்றன.

தமது சொந்த வீடுகளைக் கட்டுவோருக்குப் பெரிய அளவில் அரசு அவர்களுக்குஅளிக்கும் வங்கி கடன்கள் உதவி புரிகின்றன. 1977 ஜனவரி 1ல் அமுலுக்கு வந்த விதிமுறைகளின்படி கடனின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர்கள் 1500 ரூபிள் கடனைப் பெற முடியும். பத்தாண்டுகளில் இது திருப்பிச்செலுத்தப்படலாம்.

கடன்கள் 10 முதல் 15 ஆண்டு கால கட்டத்திற்கு வழங்கப்படுகின்றன. அலலது கட்டடத்தின் மொத்தச் செலவில் 70 சத விகிதம் வரையில் கடன்களைப்பெறுகின்ற கூட்டுறவுகள் விஷயத்தில் இது 10 முதல்12ஆண்டுகள்வரை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கடன்களுக்கு 0-5 சதவிகித வருடாந்தர வட்டி விதிக்கப்படுகிறது. கட்டட மற்றும் நிலவரிகளிலிருந்து இவற்றுக்கு விலக்களிக்கப்படுகின்றது.

சட்டரீதியான உத்தரவாதங்கள் கீழ்வரும் வழியில்

- ஓ. பிளெத்னேவா--ஒய். ஷெஷெனின் -

ஒதுக்குவதற்கும் அரசாங்கநிறுவனங்கள் மேலும் மேலும் விரிவான வாய்ப்புகளைக் கொண்டிருக்கின்றன.

உலகில் மிகவும் குறைவான வாடகைகளினால் சோவியத் மக்கள் அனுகூலமடைகின்றனர். வாடகைகள் 1926ம் ஆண்டிலிருந்தும், உபயோக சேவைகளுக்கான கட்டணங்கள் 1934ம் ஆண்டிலிருந்தும் மாறவில்லை. அவை மிகமிகக் குறைவாக உள்ளன. சுமார் 500 கோடி ரூபிள் ஆண்டு தோறும் சர்க்காரின் மானியமாக வீட்டு வசதிக்கும், உபயோக சேவைகளுக்கும் அளிக்கப்படுகின்றன,

வீட்டு வசதி கூட்டுறவுகளுக்கும், தனிப்பட்டமுறையில் வீடுகளைக் கட்டிக்கொள்வோருக்கும் அரசு அளிக்கின்ற சர்வாம்ச உதவியினால் மற்றொரு முக்கிய பாதுகாப்பு உத்தரவாதம் செய்யப்படுகிறது. அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுள்ள மற்றும் வர்த்தக ரீதியிலான வெட்டுமரங்களை வாங்குவதற்கான மரம் வெட்டும் பிரதேசங்களும் ஒதுக்கப்படுகின்றன. வங்கியிலிருந்து கடன்களும் கொடுக்கப்படுகின்றன.

தமது சொந்த வீடுகளைக்கட்டிக்கொள்வோர், அவர்களுக்குத் தேவைப்படும் கட்டட சாமான்களையும், கருவிகளையும் அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற கடைகளிலும், கூட்டுறவுக்கடைகளிலும் வாங்கிக் கொள்ளலாம். தனிப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களின் குடியிருப்புக் காலனிகளுக்கு ஸ்தல சோவியத்துகள் வசதிகளையும், மின்விசையையும், குடிதண்ணீரையும் ஏற்பாடு செய்துகொடுக்கின்றன.

சோவியத்யூனியனின் குடிமக்களுக்கு தமது சொந்தச் சொத்தாக ஒரு வீட்டை உடைமையாகக்கொள்வதற்கு உரிமைஉண்டு என்று அரசியல் சட்டத்தின் 13-வது ஷரத்து வரையறை செய்கிறது, இந்த உரிமை சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றது. நிர்மாணத்தின்வேகத்தை விரைவுபடுத்துவதற்கும் ஏற்படும் செலவுகளைக் குறைப்பதற்கும் அடையப் பெறுகின்றன. இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வகை வீட்டு வசதி-அவர் குடியிருக்கும் இடம், வேலை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள வீடுகள் நிர்மாணப் பாணி ஆகியவற்றைப் பொறுத்து அளிக்கப்படுகிறது. அவர் ஓர் அரசாங்க குடியிருப்புப் பகுதியை அல்லது கூட்டுறவு வீட்டைப் பெறலாம். அல்லது தனது சொந்த வீட்டைக் கட்டிக் கொள்ளலாம். நிரந்தர விதிமுறைகளுக்கு ஏற்பதான் வீட்டு வசதி பெறும் உரிமை செயல்படுத்தப்படலாம்.

குடித்தனக்காரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, மற்றொரு முக்கிய சட்டப் பாதுகாப்பு ஆகும். முதலில் மனச்சான்று பூர்வமான குடித்தனக்காரர்களுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளில் வாழ்நாள் பூராவும் குடியிருப்பதற்கு உரிமை உண்டு. ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு ஆதாரங்கள் இருந்தால் ஒழிய ஒருவர் ஆணோ பெண்ணோ வசித்து வரும் இடத்தில் அவருடைய குடும்பத்தின் உறுப்பினர்களும் அதே உரிமையை அனுபவிக்க உரிமை உண்டு. வாடகைக்கு இருப்பவர் காலமாகி விடும்போது அவருடைய குடும்பத்தினருக்குத் தொடர்ந்து இந்த உரிமை உண்டு, அவருடைய குடும்பத்தின் எந்த உறுப்பினருடனும் அவர் 18 வயது அடையும் போது வாடகை ஒப்பந்தம் செய்து கொள்ளப்படலாம்.


தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீட்டை நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமென்று சோவியத் பிரஜைகளை வற்புறுத்தும் அரசியல் சட்ட விதியும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குடித்தனப் பகுதிக்கும் கட்டடத்திற்கும் சாதனங்களுக்கும் குடித்தனக்காரராலோ அல்லது அவரது குடித்தனப்பகுதியில் வசிப்பவர்களாலோ ஏற்படும் பழுதினால் உண்டாகின்ற சகல நஷ்டங்களுக்கும் குடித்தனக்காரர் வீட்டைத் தனக்கு வாடகைக்குக் கொடுத்தவருக்கு (ஸ்தல சோவியத் நிறுவனம் அல்லது கூட்டுறவு) ஈடு செய்ய வேண்டும். குடித்தனககாரரோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ தமது குடியிருப்புப் பகுதியைத் தொடர்ந்துநாசப்படுத்தினாலோ அல்லது பழுதடையச் செய்தாலோ அவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் வேறு எந்த வீட்டுவசதியும் அளிக்கப்படாமலேயே வெளியேற்றப்படலாம்.

# அக்டோபர்சோஷலிஸ ...

## 61-வது ஆண்...

சோவியத் தேசிய ...

## அக்டோபர் மகா ...
## தேசவிடுதலைப் பே...



காலனி மற்றும் அரைக் காலனிகளின் ஒடுக்கப்பெற்ற மக்களுடனும், விடுதலைபெற்ற மக்களுடனும், உறுதியான அரசியல் கூட்டணியை நிறுவும் கொள்கையைச் சோவியத் அரசு இடையறாது பின்பற்றி வந்துள்ளது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்த நாடுகளின் போராட்டமும், தேசவிடுதலைப் புரட்சிகளின் வீச்சும் ஆழமும், விடுதலைபெற்ற நாடுகளின் வளர்ச்சியும், தற்காலப் புரட்சிகரப் போக்கில் அவற்றின் இடமும் சோவியத் யூனியனின் தலைசிறந்த அரசியல், சித்தாந்தப் பங்குடன் அறுபத்தொரு ஆண்டுத் தொடர்பு கொண்டவை தேசவிடுதலை உத்வேகம் அ... பத்தியத்தின் ... அமைப்பில் ... யின் துவக்கத்... டுக்காட்டிய

- ஜியர்ஜி கிம் -

யாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மூன்று நிகழ்ச்சிகளை குறிப்பிடவேண்டும். (1) உலகில் ...

புரட்சி; [2] ... கப்போரில் ... ளின் மாபெ... புரட்சிகரவிடு... தின் தீவிர வ... டிய முக்கிய... களை இந்த ... கியது; [3] ... யனின் ராணு... தார பலம் ... உலக சோஷ... எழுச்சி மற்று... டின் விளைவா... திற்கு ஆதர... களின் நிலையி... மாற்றம்; ... தேசவிடுதலை... வெற்றிக்கு இ... நிலைகள் உரு...

இப்பொழு... சக்திகளுக்குச்... கூட்டுச் சமுத... வரும் ஆதர... புதிய துறைக... யுள்ளன; ... நாடுகளின் ... வாழ்வையும் ... யான பரஸ்... யும் அவை த... றன. ஆட்சி... புரட்சிகர ஐ... முதலாளித்து... சிப்பாதைக்கு ... முறையில் அ...

## கொள்ளைலாப வியாபாரமா? அங்கே இல்லை!

ரஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் கூட்டுப்பண்ணை மார்க்கெட்டுகளில் 1977ல், 300 கோடி ரூபிள் மதிப்புள்ள பண்ணைப் பொருளகள் விற்பனை செய்யப்பட்டன. இதற்கு முந்திய ஆண்டுவிற்பனையைவிட இது 10 சதவிகிதம் ஆகும். அரசு, மற்றும் கூட்டுறவு வர்த்தக நிறுவனங்களில் விற்பனை செய் மற்ற நாடுகளைப் போல் சோவியத் யூனியனிலும் விலைவாசியானது, தேவைகளையும் சட்டை நிலைமையையும் பொறுத்திருக்கிறது. விலைகளைக் கூட்டவோ குறைக்கவோ அதிகாரிகளுக்கு உரிமை இல்லை. அப்படிச் செய்வது சம்பந்தப்பட்ட தரப்புகளது சம்மதத்தின் பேரில் விலைகளை நிர்ணயிக்க வசதி செய்யும் சட்டங்களை மீறிய செயலாகும்.

- அனதோலி வொரொகஞேவ் -

யப்பட்ட விவசாயப் பொருட்களில் இது 8.5 சதவிகிதமாகும். 1976ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது விலைவாசிகள் சராசரி 2 சத விகிதம் குறைந்தன.

விலைகளின் மீது அரசு செலவாக்குச் செலுத்திய போதிலும் விலைக்கட்டுப்பாடு எதையும் அது சுமத்துவதில்லை. பண்ணைப் பொருளகளின் உற்பத்

[7ம் பக்கம் பார்க்க]

# யூனியன் குடியரசுகள் ...

தேசியக் குடியரசுகள் சோவியத் யூனியனில் சேர்ந்த பொழுது, பொருளாதாரம், மற்றும் சமுதாய வளர்ச்சியைப் பொறுத்தவரை அவை வெவ்வேறு நிலைகளில் இருந்தன. ஒவ்வொரு குடியரசும் தானாகவே இஷ்டப்பட்டு, யூனியனில் சேர்ந்தது. அவற்றின் முழுமையான சம உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

சோவியத் சோஷலிச சமஷ்டியின் முக்கிய அம்சங்கள் சரியானவை என்பதை 50செ ஓ ற ஆண்டுகளுக்கு அதிகமான அனுபவம் முழுமையாக நிரூபித்து விட்டது, அதனால்தான் சென்ற ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பு... டம் இந்த ... வங்களைக் கொ... மாற்றவில்லை.

ஒவ்வொரு ... யரசும் விரும்... யூனியனிலிரு... மாகப் பிரிந்... சட்டரீதியாக... கப்பட்டுள்ள... மையே, அ... தாமாக இஷ்... யத் யூனியனு... வருவதற்குச் ... வாதமாகும்.

சோவியத் ... படைச் சட்...

# ...லிஸ மகாபுரட்சியின்

## ...ஆண்டு விழா

### ...தேசிய தினம்

# ...மகா புரட்சியும் ...ப் போராட்டமும்



...வற் தேசவிடுதலை இயக்கத்திற்கு ...யத் உத்வேகம் அளித்து ஏகாதி ...அர பத்தியத்தின் காலனியாதிக்க ...டன் அமைப்பில் ஒரு நெருக்கடி ...டுத் யின் துவக்கத்தைக் கோடிட் ...வை டுக்காட்டிய அக்டோபர்

...யர்ஜி கிம் -

...வர ...ப்ந்த ...றிப் ...லகில் புரட்சி; [2] இரண்டாம் உலகப்போரில் சோவியத் மக்களின் மாபெரும் வெற்றி; புரட்சிகரவிடுதலை இயக்கத்தின் தீவிர வளர்ச்சிக்கு வேண்டிய முக்கியமான முன்தேவைகளை இந்த வெற்றி உருவாக்கியது; [3] சோவியத்யூனியனின் ராணுவ, பொருளாதார பலம் வலுப்பெறுதல்; உலக சோஷலிச அமைப்பின் எழுச்சி மற்றும் உறுதிப்பாட்டின் விளைவாகச் சோஷலிசத்திற்கு ஆதரவாக உலகசக்திகளின் நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம்; இதன்பயனாகத் தேசவிடுதலைப் புரட்சிகளின் வெற்றிக்கு இசைவான சூழ்நிலைகள் உருவாதல்.

இப்பொழுது தேசவிடுதலைச் சக்திகளுக்குச் சோஷலிசக் கூட்டுச் சமுதாயம் அளித்து வரும் ஆதரவும் உதவியும், புதிய துறைகளுக்குப் பரவியுள்ளன; விடுதலைபெற்ற நாடுகளின் பொருளாதார வாழ்வையும் நாடுகளிடையேயான பரஸ்பர உறவுகளையும் அவை தழுவி நிற்கின்றன. ஆட்சிக்கு வந்துள்ள புரட்சிகர ஜனநாயக அரசுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதைக்கு வழிசமைக்கும் முறையில் ஆழமான சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களைக் கொணர்ந்து உள்ள இடத்தில், இத்தகைய ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது. ஏகாதிபத்திய ஆட்சியின் போது சொல்லமுடியாத துன்ப துயரங்களை அனுபவித்துள்ள மக்கள், முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் இருந்து விலகிச் சோஷலிசப் பாதையை நோக்கிச் செல்வது இயற்கையே.

இன்று கோடிக்கணக்கான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள், வரலாற்றின் ஆக்கபூர்வமான போக்கில் ஈடுபட்டுள்ளனர்; உலக அரசியல் மீது மேன்மேலும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவத்தின் உண்மையான சாராம்சம் இதில்தான் அடங்கியுள்ளது. உலகு தழுவிய அளவில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் நமது சகாப்தத்தில், டஜன் கணக்கான நாடுகள் முதலாளித்துவத்தை நிராகரித்து சோஷலிசத் திசைவழியில் செல்லத் தொடங்கியுள்ள யுகத்தில் அக்டோபர் புரட்சியின் அனுபவம் மனிதகுலம் அனைத்துக்கும் மிக முக்கியமான தாகும்.

மூன்றும் உலகிலுள்ள தேச விடுதலைச் சக்திகள் தமது ஒளிமயமான விருப்பங்களையும் நம்பிக்கைகளையும் அக்டோபர் புரட்சியின் தாயகத்துடனும் சோஷலிச கூட்டுச் சமுதாயத்துடனும் இணைத்துள்ளனர். நம் காலத்தின் புரட்சிகரச் சக்திகளின் ஒற்றுமையும் சர்வதேச ஒருமைப்பாடும் மேன்மேலும் வலுப்பெறும்போது, ஏகாதிபத்தியத்தின் மீது மேலும் புதிய வெற்றிகள் பெறமுடியும்; உலகெங்கணும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகிய லட்சியங்களும் மேன்மேலும் வெற்றிவாகை சூட இயலும்.

# சோவியத் அரசியல் சட்டம்

சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டத்தைச் சோவியத் நாடாளுமன்றம் 1977 அக்டோபர் 7ந் தேதியன்று அங்கீகரித்தது.

அதன் பிறகு சென்ற ஓராண்டுக் காலத்தில் புதிய அரசியல் சட்டத்தின்படி, நாடு வாழ்ந்துள்ளது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது ஓர் ஆண்டுக்காலம் என்பது ஒரு கண நேரம் போன்றதே என்றாலும், புதிய அரசியல் சட்டம், சோவியத் சமுதாயத்தின் வாழ்க்கையில் பல கணிசமான மாற்றங்களைச் செய்துள்ளது. புதிய அரசியல் சட்டத்திற்கு இணங்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

பல இன மக்களைக் கொண்ட சோஷலிஸ நாட்டில், மக்களின் பூரண சமத்துவத்தைச் சோவியத் அரசியல் சட்டம், சட்ட முறைமைப்படுத்தி; தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் சொந்த விவகாரங்களில் 'சுய ஆட்சி உரிமையையும் உறுதிப்படுத்தியுள்ளது. புதிய சோவியத் அரசியல் சட்டத்தை அனுசரித்து, எல்லா யூனியன் குடியரசுகளும், பின்னர் எல்லா சுய ஆட்சிக் குடியரசுகளும், தங்கள் தேசியத் தனித்தன்மைகளைக் கருத்திற்கொண்டு, தங்கள் தேசியச் சிறப்பு அம்சங்களை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், சோவியத் யூனியனின் எல்லா நடவடிக்கைகளிலும் அவற்றின் பங்கை உயர்த்தும் வகையிலும் தங்கள் சொந்த அரசியல் சட்டங்களை நிறைவேற்றின.

புதிய அரசியல் சட்டம் செயல்படுத்தப்படுவதன் விளைவு, இந்த முக்கியமான சட்டங்கள் இயற்றப்பட்டது மன்று. சமுதாயத்திற்கும் தனிநபருக்குமிடையிலும், அரசுக்கும் குடிமக்களுக்குமிடையிலும், அடிப்படையில் புதிய, உண்மையான மனிதாபிமானம் மிக்க உறவுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குப் புதிய அரசியல் சட்டம் பங்காற்றியிருப்பதாகச் சோவியத் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். இவை சோஷலிஸத்தில் உள்ளடங்கியுள்ள உறவுகளாகும். அடிப்படை அரசியல் உரிமைகளையும், பிரஜைகளின் சுதந்திரங்களையும் கடமைகளையும் செயல்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பணி புரியவும், தங்களுக்குப் பிடித்த தொழிலைத் தேர்ந்தெடுக்கவும் சோவியத் பிரஜைகளுக்கு உள்ள உரிமைக்கு இது விசேஷமாகப் பொருந்தும், சென்ற ஆண்டில் தொழிலாளர் சட்டங்களை மீறியதாகவும், தொழிலாளர் நலன்களைப் புறக்கணித்ததாகவும் பல்வேறு நிலைகளிலும் உள்ள ஆயிரக் கணக்கான நிர்வாக அதிகாரிகள், தொழிற்சங்கங்களின் வற்புறுத்தலின்பேரில் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை மட்டும் இங்கு கூறினால் போதுமானது.

அரசின் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் புதிய அரசியல் சட்டம் பொருளாதார' சமுதாய, கலாசாரத்துறைகளில்

(7-ம் பக்கம் பார்க்க)

- கிளப் ஸ்பிரிதொனேவ் -

## புள்ளி விபரங்கள்

மருத்துவம், சுகாதாரம் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும் நிர்வகிப்பதற்கு ஒரே அரசாங்க அமைப்பை நிறுவிய முதல் நாடு உலகிலேயே சோவியத் யூனியனே ஆகும். மருத்துவக் கல்லூரிகள் கவுன்சில் அமைக்கும் ஓர் ஆணையில் 1918 ஜனவரி 24ல் வி. இ. லெனின் கையெழுத்திட்டார். இந்தக் கவுன்சில்தான் சோவியத் சுகாதார அமைச்சகத்துக்கு முன்னோடியாக இருந்தது.

ஃ ஃ ஃ

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யாவில் சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகளாக இருந்தது. இப்போது இது 70 ஆக உயர்ந்துள்ளது.

ஃ ஃ ஃ

சோவியத் யூனியனில் சிசு மரண விகிதம் 60 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விகிதத்தில் இப்போது ஒன்பதில் ஒரு பங்காக மட்டுமே உள்ளது. ஐரோப்பாவிலேயே ஜார் கால ரஷ்யாவில் தான் இந்த விகிதாசாரம் மிகவும் அதிகம். பிறக்கும் குழந்தைகளில் நான்கில் ஒரு பங்கு குழந்தைகள் ஒரு வயது பூர்த்தியாகும் முன்பே இறந்து வந்தன.

இந்த ஆண்டுகளில் சோவியத் யூனியனில் பொது மரண விகிதம் 71·5 சத விகிதம் குறைந்துள்ளது.

ஃ ஃ ஃ

சோவியத் மக்களின் உடல் நலத்தை 9 லட்சத்துக்கு அதிகமான டாக்டர்கள் கவனித்துக் கொள்கின்றனர். சோவியத் யூனியனில் 306 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் இருக்கிறார்கள். அதே சமயம் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் 446 பேருக்கு ஒருவர் வீதமும், அமெரிக்காவில் 476 பேருக்கு ஒருவர் வீதமும், பிரான்சில் 571 பேருக்கு ஒருவர் வீதமும், பிரிட்டனில் 637 பேருக்கு ஒருவர் வீதமும், ஜப்பானில் 662 பேருக்கு ஒருவர் வீதமும் உள்ளனர்.

# சோவியத் சமுதாயத்தில் பெண்கள்

சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தை நிர்மாணித்ததன் விளைவாக, சோவியத் குடிமகளின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான வசதிகளின் கணிசமான அபிவிருத்தி செய்வது சாத்தியமாகி உள்ளது. பெண்கள் பிரச்னையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சோவியத்யூனியனில் சட்டத்தின் முன் ஆண்களும் பெண்களும் சமம் என்பதோடு மட்டும் அல்லாமல். எல்லாத் துறைகளிலும் இந்த சம உரிமைகளைச் செயல்படுத்தவும் செய்கின்றனர். பெண்களின் உண்மையான சமத்துவம், சோவியத்யூனியனின் 'புதிய அரசியல் சட்டத்தில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகள் உண்டு என்று அரசியல் சட்டத்தின் 35வது ஷரத்து கூறுகிறது.

சோவியத் யூனியனில் குடும்பம், அரசின் பாதுகாப்பில் உள்ளது. குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், பொதுச் சேவை வசதிகள், இவை போன்ற குடும்ப உதவித் திட்டங்களை விஸ்தரித்து அபிவிருத்தி செய்வதற்கு அரசின் சமூக, பொருளாதார த்திட்டங்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. இப்பொழுது நிரந்தரமாக இயங்கும் பாலர் வகுப்புக்களும் நர்ஸரி பள்ளிகளுக்கும் 1. 3 கோடி குழந்தைகள் செல்கின்றன; சுமார் 80 லட்சம் குழந்தைகளுக்கு மேல் பள்ளிகளுக்குச் செல்கின்றன; 2.1 கோடி சிறுவர், சிறுமிகளுக்கு மேல் தங்கள் கோடை விடுமுறை நாட்களை இளம் பயனீர் முகாம்களிலும், உல்லாசப் பயண ஸ்தலங்களிலும் கழிக்கின்றனர்.

குடும்பங்களின் தேவைகள் பற்றி அரசு காட்டும் அக்கறைக்கு மற்றொரு உருட்யடியான எடுத்துக்காட்டு, பொது உணவு விடுதிகளையும் சேவைகளையும் விஸ்தரிப்பதாகும். இப்பொழுது 2. 80, 000 பொது உணவு விடுதிகள், தினந்தோறும் சுமார் 9 கோடியே

(7-ப் பக்கம் பார்க்க)

--வாலந்தினா நிகொலயேவா தெரஷ்கோவா--

(விண்வெளி வீரர்; சோவியத் பெண்கள் கமிட்டித் தலைவர்; சோவியத் நாடாளுமன்ற தலைமைக் குழு உறுப்பினர்)

# ...சுகள் எல்லாவற்றிற்கும் முழு அரசுரிமை

...ரம், கப்பட்ட புதிய அரசியல் சட்டம் இந்த சமஷ்டியின் வடிவங்களைக் கொள்கை அளவில் மாற்றவில்லை.

ஒவ்வொரு யூனியன் குடியரசும் விரும்பினால் சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரமாகப் பிரிந்துபோக அரசியல் சட்டரீதியாக உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையே, அந்தக் குடியரசுகள் தாமாக இஷ்டப்பட்டு சோவியத் யூனியனுக்குள் இருந்து வருவதற்குச் சிறந்த உத்தரவாதமாகும்.

சோவியத்யூனியின் அடிப்படைச் சட்டத்திற்கு இணங்கவும். ஒவ்வொரு குடியரசின் தேசிய சிறப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டும் தயாரிக்கப்பட்டு நாடு தழுவிய விவாதத்திற்காக மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள குடியரசுகளின் நகல் அரசியல் சட்டங்கள், தேசிய அரசுரிமை மேலும் பலப்படுத்தப்பட்டிருப்பதையும் சோவியத் யூனியன் முழுவதன் நடவடிக்கைகளிலும் யூனியன் குடியரசுகளின் பங்கு உயர்ந்திருப்பதையும் பிரதிபலிக்கின்றன.

யூனியன் குடியரசு ஒவ்வொன்றும், அரசுரிமை பெற்ற ராஜ்யம் என்ற முறையில் வெளிநாடுகளுடன் உறவுகள் ஏற்படுத்திக்கொள்ளவும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும், அவற்றுடன் ரஜ்ய உறவுகள் ஏற்படுத்திக்கொள்ளவும் சர்வதேச நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும் உரிமைகளை சோவியத் யூனியன் அடிப்படைச் சட்டத்திற்கு இணங்க குடியரசுகளின் அரசியல் சட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக, ரஷ்யக் குடியரசு, உக்ரேன், 'ஜார்ஜியா, அஜர்பைஜான், உஸ்பெக்கிஸ்தான் முதலிய குடியரசுகளில் பல அயல்நாடுகள் கான்சுலேட்டுகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தக் குடியரசுகளும் அந்த நாடுகளில். தங்கள் பிரதிநிதிகளை நியமித்துள்ளன. சர்வதேச நிறுவனங்களுடன் சில சோவியத் குடியரசுகள் தொடர்பு கொண்டுள்ளன. உக்ரேனும் பைலோ ரஷ்யாவும் ஐ. நா. வில் சோவியத்யூனியனுக்குச் சமமாக அங்கம்வகிக்கின்றன.

சட்டம் இயற்றுவதில் யூனியன் குடியரசுகளுக்கு உள்ள உயர்ந்த பங்கு, அவற்றின் அரசுரிமையைப் பெரிதும்

(7-ம் பக்கம் பார்க்க)

## புள்ளி விபரங்கள்

சோவியத் யூனியனில் 1978-ம் ஆண்டின் முற்பாதியில் 9 கோடி 50 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பல்வேறு வகையான கல்வி பெற்றனர்.

1977-ம் ஆண்டின் தொடக்கத்தில் 12கோடி 61 லட்சம் பேர் அதாவது 10 வயதுக்கு மேற்பட்டோரில் 59 சத வீதத்தினர் மேற்கல்வி அல்லது உயர்நிலைக்கல்வி (பூரண அல்லது அரைகுறையான) கற்றவர்களாக இருந்தனர்.

பகல் நேரத்தில் படிக்கும் மாணவர்களில் முக்கால் பங்கினர் அரசாங்க உபகாரச் சம்பளங்கள் பெறுகின்றனர்.

1978-ம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 8 லட்சம் பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்கள் உட்பட 20 லட்சம் நிபுணர்களும், தனிப் பயிற்சி உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தேர்ச்சியுற்ற 12 லட்சம் பேரும் தேசப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளில் பணியாற்றத் தொடங்கினர்.

# இந்திய வானொலி ஒரு தலைப்பட்சமாக செய்திகளை ஒலிபரப்பவில்லை

## இந்திராவின் கூற்றுக்கு அட்வாணி மறுப்பு

புதுடில்லி, நவ. 6

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமகி இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்திலேயே மக்கள் தொடர்பு சாதனங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டன. இதற்கு எம்மிடம் போதிய ஆதாரங்கள் உண்டு.

இவ்வாறு இந்திய தகவல் ஒலிபரப்புஅமைச்சர் திரு எல். கே அட்வாணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜனதாகட்சிக்கு ஆதரவாக இந்திய வானொலி நிலையம் ஒரு தலைப்பட்சமான செய்திகளை ஒலிபரப்பிவருகின்றது என்றும் சிக்மகளூர் இடைத்தேர்தல் குறித்தும் ஜனதா கட்சிக்கு ஆதரவாகவே செய்திகள் ஒலிபரப்பப்பட்டன என்றும் இந்திரா காங்கிரஸ்தலைவி திருமதி இந்திராகாந்திதெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. அட்வாணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய வானொலி கடந்த 19 மாதங்களாக நேர்மையுடனும் ஜனநாயகரீதியிலும் செய்திகளை ஒலிபரப்பி பலரினதும் பாராட்டுக்களைப்பெற்றுள்ளது என்றும் தெரிவித்த திரு. அட்வாணி குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சாது, தொடர்ந்து நேர்மையுடன் பணிபுரியுமாறுதாம் ஒலிபரப்புத்துறை ஊழியர்களுக்குப் பணித்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ)

## சுக்கிரனுக்கு விரையும் கோள்கள்!

மாஸ்கோ, நவ 6

சுக்கிரகிரகத்தை நோக்கி 'வெனிரா-11,, 'வெனிரா-12' ஆகிய இரு தானியங்கி செயற்கைக் கோள்களும் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கின்றன. இவை பயணம் செய்யும் போதே புற விண்வெளியின் பௌதிக நிகழ்ச்சிகளையும் விரிவாக ஆராய்கின்றன.

இக்கோள்கள் மூலம் சூரிய மண்டலத்தில் நிகழ்ந்த ஒரு கொந்தளிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. (இ)

## மீண்டும் வாக்குகள் எண்ணினால்

## சிக்மகளூர் முடிவுகள் தாமதமாகும்

சிக்மகளூர், நவ. 6

சிக்மகளூர் இடைத்தேர்தல் முடிவுகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலையே வெளிவரும் என அறிவிக்கப்படுகிறது.

அபேட்சகர் எவராவது கோரும் பட்சத்தில் இரண்டாவது தடவையும் வாக்குகள் எண்ணப்பட்டால் முடிவுகள் வெளிவருவதில் மேலும்தாமதமாகும் என்றுதேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த தேர்தலை ஒட்டி ஆங்காங்கே சிறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் குறிப்பிடக்கூடிய சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லையென்றும்மத்திய றிசேர்வ் பொலிஸ் படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 10 நாட்கள் தடையுத்தரவு

இதே வேளையில் இந்த இடைத்தேர்தலையொட்டி அசம்பாவிதங்களைத் தவிர்க்க சிக்மகளூர் மாவட்டம் முழுவதும் 10 நாட்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது (இ)

## ஈரான் பிரதமர் ராஜினமா!

டெஹ்ரான், நவ. 6

ஈரானில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டம் காணமாக எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து பிரதம மந்திரி ஜஹப் இமானி தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

10 வாரங்கள் மட்டுமே இவர்பிரதமராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான் மன்னர் ஷா, மற்றும் மந்திரிகள் கலந்துகொண்ட அவசரக் கூட்டம் ஒன்றில் பங்குபற்றியபின்னரே ஜஹப் இமானி ராஜினமாச் செய்தார்

டெஹ்ரானிலும் மற்றும்சில இடங்களிலும் ஆர்ப்பாட்டம் செய்து வரும் அரசு எதிர்ப்பாளர்கள் நேற்று பஸ்கள், அரசாங்க, தனியார்கட்டிடங்கள், வங்கிகள் ஆகியவற்றைச் சேதப்படுத்தினர். (இ)

## தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரியில்

## வெள்ளம், புயல், மண்சரிவு: இதுவரை 150 பேர் பலி!

சென்னை. நவ. 6

தமிழ்நாடு. கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் வெள்ளம், மண்சரிவு, புயல் போன்ற இயற்கை அழிவுகளினல் இதுவரை 150 பேர் பலியாகிஉள்ளனர்.

உதகமண்டலம், திருச்சி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளே மண்சரிவினலும் வெள்ளத்தினலும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி பாண்டிச்சேரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## தொண்டமானாறு முதல் கற்கோவளம் வரை

## மீன்பிடி வள்ளங்கள் நங்கூரமிட 10 இடங்கள் அபிவிருத்தியாகும்

[புலோலி]

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த தொண்டமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையில் உள்ள மீனவர்களின் நன்மை கருதி இப்பகுதியைச் சேர்ந்த 10 இடங்களில் மீன்பிடி வள்ளங்கள் நங்கூரமிடப்படக்கூடியதாக அபிவிருத்தி (வான்தோண்டல்) செய்யப்படவுள்ளன.

பருத்தித்துறை எம். பி. திரு. க துரைரத்தினம், வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை, வேலும்மயிலும் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து எடுத்த நடவடிக்கையின் பயனகவே இப்பகுதி மீனவர்கள் இந்த நன்மையை அடையக்கூடியதாக உள்ளது.

சுமார் 200 அடி நீளம் கொண்ட வள்ளங்கள், கட்டுமரங்கள் என்பன நங்கூரமிடப்படுவதற்குரிய வான் தோண்டுவதற்கு மீன்பிடித் திணைக்களத்தின் கரையோரப் பாதுகாப்புப் பகுதிப் பொறியியலாளர் திரு. ஹகவிட்ட நேரில் சென்று பார்வையிட்டு அனுமதி வழங்கியுள்ளார். இவ்வேலைகள் யாவும் உரிய தொகுதிகளின் பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். அதற்கென ஒவ்வொரு வானுக்கும் 5000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முனை, சின்னத்தோட்டம், சுப்பர்மடம், இன்பருட்டி 1' இன்பருட்டி 2, சக்கோட்டை ஊறணி, ஆதிகோவிலடி, தொண்டமானறு, மயிலிட்டி ஆகிய இடங்களிலேயே இவ் வான்கள் தோண்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த இடங்களிலேயே முதன்முதல் வான் தோண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## லயன்ஸ் கழக யாழ். வலயப் புதிய தலைவர்

[புலோலி[

லயன்ஸ் கழகத்தின் யாழ். வலயத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் மேற்படிப்பின் பொருட்டு வெளிநாடு சென்றிருப்பதால், பட்டயக் கணக்காளர் திரு. எஸ் சோமசுந்தரம் யாழ். வலயத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 5ம் நூற்றுண்டு ஓவியம் கண்டுபிடிப்பு!

மாஸ்கோ, நவ. 6

மத்திய ஆசியக் குடியரசான தாஜிக்கிஸ்தானின் வட பிரதேசத்திலுள்ள பெங்ஜிகென்ட் என்ற புராதன நகரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கிறிஸ்துவுக்குப்பின் 8-5 நூற்றுண்டு காலத்திலிருந்து செளத்திய நாகரிக சகாப்தத்தைச் சார்ந்தது எனக்கருதப்படும் தலைசிறந்த புராதன ஓவியமொன்று தொல்பொருளியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பைசாத்துடன் போர்வீரன் ஒருவன் பொருதுகின்ற காட்சியினைச் சித்திரிக்கும் இந்த ஓவியம் மிகப் பிரகாசமான வண்ணக் கலவைகளைக்கொண்டு தத்ரூபமான முறையில் தீட்டப்பட்டுள்ளது. (இ)

## முல்லைத்தீவில் மின்தடை: மக்கள் பெரும் அவதி

]முல்லைத்திவு]

முல்லைத்தீவிலும் மாங்குளத்திலும் மின்சாரம் இல்லாமையால் இப்பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இரு இடங்களிலும் இயங்கிய எஞ்சின் கோளாறு காரணமாக மின் தடைப்பட்டுவிட்டது. முல்லைத்தீவில் உள்ள கடைகளில் அதிகமானவை மாலை 6 மணிக்கே பூட்டப்படுகின்றன. முல்லைத்தீவில் கடந்த சில மாதங்களாக அதிகாலை ஒரு மணிவரையுமே மின்சாரம் வழங்கப்பட்டது. தற்போது மின்சாரம் இல்லாமையால் முல்லைத்தீவு நகரம் இருளில் மூழ்கிக் காட்சிதருகிறது.

மாங்குள ரயில் நிலையத்திலும் இதே நிலைமைதான். அங்கு இரவில் தீப்பந்தம் எரித்தே தங்கள் கடமைகளை மேற்கொள்கிறார்கள். ரயில் நிறுத்தப்படும் மேடையில் பெரிய தீப்பந்தம் கொளுத்தி தொங்கவிடப் பட்டிருக்கிறது. பிரயாணிகள் அதன் உதவியுடன் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். (உ)

## சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டம்

[மட்டக்களப்பு]

படுவான்கரைப் பகுதியில் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் மேற்படி திட்டம் கடந்த சனிக்கிழமை கிராம அபிவிருத்தி அலுவலர் திரு. க, சுப்பையாபிள்ளையினல் அரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி கிராமங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்களை மேலும் ஊக்குவிப்பதுடன் ஆமணக்கு, வேம்பு விதைகளைக் கொண்ட தொழில்களும், மட்பாண்டம் வனைதலும் ஆரம்பிக்கப்படும்.

இத்திட்டத்தை அமுல் செய்வதற்கு குடியேற்ற அதிகாரி திரு, எஸ் பெரியதம்பி, வண. பிதா. ஒக்கஸ், கி. அ. அலுவலர் திரு. சுப்பையாபிள்ளை ஆகியோர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. [உ]

## "ஆக்கபூர்வ முயற்சியே வளர்ச்சிக்கு முதற்படி"

[சங்கானை]

"கிராம வளர்ச்சி அப்பகுதி மக்களின் ஆக்கபூர்வமான முயற்சியிலேயே தங்கியுள்ளது. கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூகநிலையம் மற்றும் சமூக முன்னேற்ற இயக்கங்கள் மக்களை ஒன்றிணைத்து அபிவிருத்தித் திட்டங்களில் தீவிர அக்கறைகொள்வதால் வெகுவிரைவில் அப்பகுதி மக்கள் அதன் பலாபலன்களை அடையமுடியும்."

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. ஜெகநாதன் சங்கானைக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற வலி-மேற்குச் சனசமூகநிலையங்களின் சமாசக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையில் கூறினர்.

வலி-வடக்குச் சமாசத் தலைவர் திரு. எஸ். சிவஸ்கந்தா தலைமையில் கருத்தரங்கு நிகழ்ந்தது.

மேலதிக அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

"பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சியில் அக்கறைகொண்டுள்ள அரசாங்கம் அதற்கெனப் பிரத்தியேக அமைச்சை நிறுவி அதன் மூலம் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கிப் பலதரப்பட்ட அபிவிருத்திகளைச் செய்யவுள்ளது.

"நாடு பூராவும் இம்முறை நடைமுறைப்படுத்தப்படுத்தப்படவுள்ளது. இதற்கெனப் பல கோடி ரூபாய்களையும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சுக்கிணங்கச் செலவிடவுள்ளது. எனவே இந்த நல்லதோர் வாய்ப்பை பயன்படுத்திக் கல்வி, சுகாதாரம், விவசாயம், போக்குவரத்து மற்றும் அவசியமேற்படும் துறைகளில் பயனுறச் செய்வதும் கிராம அபிவிருத்திச் சங்கங்களிலேயே தங்கியுள்ளது" என்றார்.

மாவட்டத் தேசிய இளைஞர் இயக்கத்தின் அதிகாரி திரு நீலகண்டன், சுகாதாரப் போதனசிரியர் திரு. வைத்திஸ்வரன் மற்றும் திணைக்களங்களின் உத்தியோகத்தர்களும் பங்குபற்றித் தத்தமது திணைக்களங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு ஆற்றும் சேவை பற்றியும் அதனல் அவர்கள் அடையும் பலாபலன்கள் பற்றியும் விளக்கினர். (உ)

## "ஆலயங்களில் தூய்மை மிளிரவேண்டும்"

(நீர்வேலி)

"ஆலயங்கள் தூய்மையுடன் மிளிரவேண்டும். அப்படி அமையும் ஆலயங்களில் தான் ஆண்டவனின் அருள் ஒளியும் வீசும்" என்று நீர்வேலி காமாட்சிஅம்பாள் கோவில் மின்னெளியேற்று விழாவில் கலந்துகொண்டு ஒளியை ஏற்றிவைத்துப்பேசிய தொழிலதிபர் திரு க. கனகராஜா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "தூய்மையுள்ள ஆலயங்களில் வழிபடும் அடியார்களும் அகத்தூய்மையுடன் வழிபாடு செய்யவேண்டுமென்றும் தூய உள்ளம் படைத்த அடியார்களிடந்தான் அருளும் சென்றடையும்" என்றும் கூறினர்.

திரு த பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம் பேசுகையில் "விளக்குகளுக்கு ஒளியை வழங்குவது மின்சாரம். அதுபோல எமது வாழ்க்கைக்கும் ஒளியை வழங்குவது சக்தியின் அருளே" என்று குறிப்பிட்டார்.

யாழ். வளாக மாணவர் த. மகாதேவன், காமாட்சிஅம்பாள் இந்துசமய விருத்திச் சங்கச் செயலாளர் திரு. க. சிவலிங்கம் ஆகியோரும் பேசினர். (உ)

"யாழ். மாநகரசபை மண்டபம்

# நாடக இலக்கிய முயற்சிக்கு உதவ வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் திரைப் படம் காட்டுவது நிறுத்தப் படல் வேண்டும் அம்மண்டபம் முன்னர்போல் நாடகத் துறைக்கும் இலக்கிய முயற்சிகளுக்கும் உதவும்வகை செய்யப்படல் வேண்டும். திரைப் படம் காட்டுவதற்கு எத்தனையோ படமாளிகைகள் இருக்கின்றன நாடகங்களைத் தக்கவாறு மேடையேற்றுவதற்கு அரங்கங்கள் யாழ்ப்பாணத்தில் மிக மிகக்குறைவு. இந்தக் குறைபாட்டைப் போக்க மாநகரசபை முன்வரல் வேண்டும்".

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கவிமணி வி. கந்தவனம் 'ஈழத்து நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற அறிமுக விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிற் குறிப்பிட்டார். இக் கூட்டம் யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

நூலை அறிமுகஞ் செய்து வைத்துத் திரு. ஏ ரி. பொன்னுத்துரை உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது.

"திரு க சொக்கலிங்கம் மிகவும் நிதானமாக ஈழத்து நாடக இலக்கிய வளர்ச்சியை மதிப்பீடு செய்திருக்கின்றார் முடிந்த அளவுக்கு இந்த நூற்றுண்டில் ஈழத்தில் எழுந்த எல்லா நாடகநூல்களையும் முழுமையாக ஆராய்ந்திருக்கின்றார். சிலர் நூல்களைப் படியாமலேயே விமர்சனம் எழுதுவதுண்டு. சொக்கன் நூல்களை நன்கு கற்றுக் கிரகித்தபின்னரே நூலை எழுதியிருப்பது நன்கு தெரிகின்றது"

திரு. எம். சண்முகலிங்கம் ஆய்வுரை நிகழ்த்துகையில், "சொக்கன் நாடகத்துறையின் எல்லா அம்சங்களையும் நன்கு அறிந்த ஒருவர். அதனால் இயல்பாகவே நாடக இலக்கியத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட்டுச் செல்கையில் இயக்கும் முறைகள் பற்றியும் மேடையாக்கத் தகுதி பற்றியும் குறிப்பிட்டுச் செல்கின்றார் இது நூலை முழுமையாக்குகின்றது என்று கருதுகின்றேன். இன்னும் அவரை பற்றி விரிவாகக் கூறியிருக்கலாம் என்றுகூடச் சொல்லத் தூண்டுகின்றது" என்றார்.

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். சொக்கன் தமது உரையில் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். (ஈ)


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புத்தம் புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone : 7642
Daily 10-30, 2-30, 4-15, 7-00, 9-30.
Lorella Deluca...George Marshall...Anita Ekberg
in
Sign of The Gladiators
Adventure Thrill—-Scope—Color

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பாக்கியலட்சுமி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
2-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
TEN G MEN (Action Film)


## கொள்ளை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தியைப் படிப்படியாக உயர்த்தி, அவற்றை நிணயிக்கப் பட்ட விலைகளில் அரசு மற்றும் கூட்டுறவு வர்த்தக நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்வதை நோக்கமாகக் கொண்ட பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளைத் தற்சமயம் சோவியத் யூனியன் செயல் படுத்தி வருகிறது. இதன் விளைவாக விலைவாசிகள் குறைவது இயற்கை.

மக்களுக்குத் தேவையான பல உணவுப் பொருள்களை விநியோகிப்பதில் கூட்டுப் பண்ணை மார்க்கெட்டுகள், கூடுதல் வசதி என்ற முறையில் தங்கள் முக்கியத்துவத்தை இன்று பாதுகாத்துவருகின்றன. மக்களுக்குத் தேவைப் படும் உருளைக்கிழங்கில 35 சத விகிதத்திற்கு அதிகமாகவும், காய்கறிகளில் 10 சத விகிதத்திற்கு மேலும், பழங்களில் கணிசமான அளவும், கூட்டுப்பண்ணை மார்க்கெட்டுகள் மூலம் விற்பனை செய்யப் படுகின்றன.

கிராமங்களிலிருந்து விவசாயிகள், தாங்கள் விளைவித்த பொருள்களை, அருகில் உள்ள நகரங்களுக்குக் கொண்டு சென்று விற்கின்றனர்; அவர்கள் தங்கள் பண்டங்களைக் கார் மூலமோ, ரயில் மூலமோ அல்லது விமான மூலமோ எப்படிக் கொண்டுவந்திருந்த போதிலும், அன்றைய மார்க்கெட்விலைப்படி அவற்றை விற்கின்றனர்.

உலகத்தின் வேறு எந்த மார்க்கெட்டையும் போலவே இங்கும் மார்க்கெட் விலைகள் பண்டங்களின் தரத்தையும் அளவையும் பொறுத்திருக்கின்றன. அதிகப் பண்டங்கள் மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்தால் விலைகள் குறைகின்றன. பொருளின் தரம் உயர்வாக இருந்தால் அதன்விலை உயர்கிறது.

சோவியத் யூனியனில் கூட்டுப்பண்ணை மார்க்கெட்டுகளில் பண்டங்களைக்கொண்டு வந்து விற்கும் உரிமைக்கான அடையாளக் கட்டணமாக ஒரு சிறுதொகை வசூலிக்கப்படுகிறது. எவ்வளவு பண்டம் கொண்டுவந்து விற்பனை செய்தபோதிலும் ஒரு நாளைக்கான கட்டணம் 20 சோபெக்குகள் (சுமார் ரூ. 2/-) தான்.

## சோவியத் அரசியல்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அதிக அதிகாரங்கள் அளித்துள்ளது. கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, ஓய்வு, குடியிருப்பு வசதி முதலியவற்றில் ஒவ்வொரு சோவியத் பிரஜைக்குமுள்ள உரிமைகளைச் செயல் படுத்துவதில் அவை அதிக கவனம் செலுத்துகின்றன. ஸ்தல சோவியத்துகளுக்குக் தேர்தல் நடந்து 18 மாதங்கள் ஆகின்றன இந்த 18 மாதங்களில் அவை தமது வாக்காளர்களின் 2,70,000 கட்டளைகளுக்கு மேல் நிறைவேற்றியுள்ளன.

கூட்டங்களிலும். பத்திரிகைகள், ரேடியோ, டெலிவிஷன் முதலியவற்றிலும் கடிதங்கள் மூலமும் செய்யப்படும் விமரிசனங்களுக்கு ஸ்தல சோவியத்துக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன விமர்சனத்தைப் புறக்கணிப்பதும், விமர்சித்தவர்களைத் துன்புறுத்துவதும் கம்யூனிஸக் கோட்யாடுகளையும் அரசியல் சட்டத்தையும் மீறுவதாகும்.

அரசு நிறுவனங்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் பரவலான பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நிர்வாக ரீதியான தண்டனை முறைகளைக் கைவிட்டு, போதனை, நல்லறிவு புகட்டுதல் போன்றவற்றைக் கையாளும் முறை வரவர அதிகமாகப் பின்பற்றப்படுகிறது. சாதாரணமாக ஒருவன் சிறைத்தண்டனை பெறக்கூடிய குற்றஞ்செய்தால்கூட, அந்தக் குற்றவாளியின் சமுதாய நடத்தை ஆராய்ச்சியின் அடிப்படையில், அவர்களுக்கு மக்கள் கோர்ட்டுகளும் புரொக்யூரேட்டர்களும் பகிரங்கக் கண்டனம் போன்ற எளிய தண்டனைகளுக்கு மேல் விதிப்பதில்லை.

ஆனால், மற்றப் பிரஜைகளின் உரிமைகளையும் நலன்களையும் அரசு மற்றும் சமுதாய நலன்களையும் பாதிக்கக் கூடிய கடும் குற்றங்கள் செய்வோர் உரிய தண்டனையின்றியும் தப்பிவிடமுடியும் என்பது இதற்குப் பொருள் அல்ல.

புதிய அரசியல் சட்டத்தை நாடு தழுவிய விவாதத்தின் மூலம் ஒருமனதாக ஏற்ற சோவியத் மக்கள், அதன் முதல் ஆண்டு விழாவை உற்சாகமான சூழ்நிலையில் கொண்டாடுகின்றனர்.

## சோவியத் சமுதாயத்தில்...

5-ம் பக்கத் தொடர்ச்சி[

70 லட்சம் மக்களுக்கு சேவை செய்கின்றன. இது அவர்களுக்குப் பொழுதுபோக்கு, பயிற்சி, குழந்தை வளர்ப்பு முதலியவற்றிற்குத் தேவையான நேரத்தை மிச்சப் படுத்தித் தருகிறது. பெண்களுக்கு இவ்விதம் கிடைக்கும் நேரம் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை சோவியத்யூனியனில் இந்த உணவு விடுதிகள் மற்றும் சேவைகளின் குறைந்த செலவும், மக்களுக்கு அவை சுலபமாகக் கிடைக்கும் வசதியும்தான் கவனிக்கத்தக்கது.

சோவியத் பெண்கள் ஸ்தாபன அமைப்புத் திறன் மிக்கவர்கள். கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து இது விளங்கும் சுமார் 5 லட்சத்திற்கு அதிகமான பெண்கள், நிர்வாக பதவிகளில். அதாவது தொழிற்சாலைகள். அரசுப் பண்ணைகள், கட்டிடத் திட்டங்கள், அலுவலகங்கள் முதலியவற்றின் நிர்வாகிகளாக இருக்கின்றனர். சுகாதாரசேவை, விநியோக நிறுவனங்கள், பொது உணவு விடுதிகள் முதலியவற்றில் பெண்கள் நிர்வாகிகளாக உள்ளனர்.

மாணவர் தொகையில் பாதிப்பேர் பெண்கள். ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டுள்ள பெண்களின் தொகை வேகமாக அதிகரித்துவருகிறது. விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டுள்ள பெண்களின் தொகை 40 சத வீதமாகும். இப்பொழுது வெப்ப அணுக் கிரியை, விண்வெளி உயிரியல், கணித பௌதிகம், மரபியல் உயர்-மூலக் கூறு கூட்டுப் பொருள், ரேடியோகள்-பொறியியல், கனிப்பொருளியல், தத்துவம் முதலிய துறைகளில் பெண்கள் ஈடுபடுவதைக் காணலாம்.

உயர்ந்த அளவுள்ள சமூக, அரசியல் நடவடிக்கைகள், சோவியத் பெண்களின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும்.

## யூனியன் குடியரசுகள்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

உயர்த்துகிறது. சோவியத் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவதற்கான முன் முயற்சி எடுக்க யூனியன் குடியரசுக்கு உரிமை உண்டு.

சோவியத்யூனியனில் ஒரே சீரான சோஷலிச உரிமை முறை நிலவுகிறது. அது நாடு முழுவதிலும் ஒரே சீரான சோஷலிச சட்ட அடிப் படையில் சமுதாய உறவுகளை ஒழுங்குபடுத்துகிறது.

யூனியன் குடியரசுகளில் அரசுரிமை வலுப்படுத்தப் பட்டதோடு கூடவே அவற்றின் பொருளாயத அடிப் படையை, அதாவது சோஷலிசப் பொருளாதாரத்தை ஏற்படுத்தி அபிவிருத்திசெய்து உறுதிப்படுத்துவதும் நிகழ்ந்தது. முன்பு மிகவும் பிற் பட்ட பொருளாதார நிலையில் இருந்த குடியரசுகள் உள்பட எல்லா சோவியத் குடியரசுகளும் இப்போது மிகவும் உயர்ந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன, எல்லாக் குடியரசுகளிலும் இப்பொழுது பெரிய தொழிற்சாலைகளும் விவசாயப் பண்ணைகளும் வளர்ந்துள்ளன. யூனியன் குடியரசுகளுக்குள் பொருளாதார உறவுகள் அபிவிருத்தியடைந்து வலுப்பட்டுவருகின்றன. இந்தப் பொருளாதார சுதந்திரமும் தற்போதைய உழைப்புப் பிரிவினையும் குடியரசின் சுதந்திரத்தை எந்த விதத்திலும் குறைக்கவில்லை.

சோவியத்சோஷலிச சமஷ்டியானது ஒவ்வொரு யூனியன் குடியரசுக்கும் அரசுரிமை வழங்கி, எல்லா தேசிய இனங்களுக்கும்தேசிய இனக்கோஷ்டிகளுக்கும் வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் உண்மையான சமத்துவத்தை உறுதிப் படுத்தியுள்ளது. அவற்றின் கலாசாரங்கள் செழித்துள்ளன.

---

மார்க்கெட் நிர்வாகம் பல வசதிகள் செய்து தருகிறது. அவற்றிற்காகத் தனியாகப் பணம் செலுத்தவேண்டும். சேவைகளுக்கான கட்டணங்கள் மாறுபடுகின்றன, ஆனால் ஒரு நகரம் அல்லது பிரதேசத்தில் உள்ள எல்லா மார்க்கெட்டுகளிலும் ஒரே விகிதத்தில் தான் வசூலிக்கப்படும்.

பண்டங்களை ஒரு மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு வாங்கி, மற்றொன்றில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் பழக்கம் சோவியத் யூனியனில் இல்லை. அப்படிச் செய்வது, சட்டப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும்.

### காணி வழங்கப்பட்டது

(புலோலி)

குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அபிவிருத்தி கருதி இங்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்க காணி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பங்குக்குரவர் அருட்திரு. ரெஜி ராஜேஸ்வரன் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியைத் தொடர்ந்தே இக்காணி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

அக்டோபர்புரட்சியினல்

# சோவியத் மக்கள் அடக்குமுறையையும் சுரண்டலையும் ஒழித்தனர்

## ரஷ்ய தூதுவர் செய்தி

(கொழும்பு)

அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதுடன் உழைக்கும் மக்கள் முதல்தடவையாக அடக்குமுறையினையும், சுரண்டலையும் இல்லாதொழித்தனர். உற்பத்தியில் அராஜகம் அகல, விஞ்ஞானபூர்வமான திட்டமிடப்பட்ட பொருளாதார நிர்வாகம் கொலுவேறியது. வரலாற்று ரீதியில் மிகக்குறுகிய காலகட்டத்தினுள், பாரியதும் பின்தங்கிய நிலையிலிருந்ததுமான ஒருநாடு வளர்ச்சி பெற்ற தொழிற்துறையுடனும் விவசாயத்துறையுடனும் கூடிய ஒரு முன்னேற்றமிக்க நாடாக உருமாற்றப்பட்டது.

இவ்வாறு இலங்கையின் சோவியத் ஸ்தானிகர் திரு. அலெக்ஸி எஸ். பஸியூட்டின் தெரிவித்துள்ளார்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 61வது ஆண்டு தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

அறுபத்தோரு ஆண்டுகளுக்கு முன்னர் வி. ஐ. லெனின் உலகின் முதலாவது சோஷலிஸ ராஜ்யத்தினது ஜனனத்தைப் பிரகடனப்படுத்தினர், 1917 அக்டோபர் ஒரு புதியரக ராஜ்யத்தின் ஜனனத்தை மட்டுமன்றி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பத்தையும் குறித்தது என்பதை நாம் இன்று முன்னெப்போதைக் காட்டிலும் தெளிவாகக் காணுகின்றோம்

இன்று, சோவியத்மக்களின் ஆறு தஸாப்தகால போராட்டத்தினமும், ஆக்கபூர்வமான உழைப்பினதும் முக்கிய பெறுபேறுகளைத் தொகுத்து நோக்கும்போது எம்மால் இவ்வாறு கூறமுடியும் நாங்கள் உறுதியாக நின்றோம்; போராடினோம்; வெற்றிபெற்றோம். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஈடிணையற்ற தலைவர் லெனின் எவற்றைக் கனவு கண்டாரோ எவற்றுக்காகப் போராடினாரோ, அவையாவும் சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியினதும் 26 கோடி சோவியத் மக்களினதும் செயல்பாடுகளிலும் சாதனைகளிலும் ஜீவத்துடிப்புடன் வாழுகின்றன.

கலாசாரப் புரட்சியானது சோவியத்யூனியனில் நடைபெற்ற அரசியல் புரட்சியின் இயல்பான தொடர்ச்சியாக இருந்தது. ஒரு தலைமுறையின் வாழ்க்கைக் காலத்தினுள், எழுத்தறிவின்மை என்ற பெரும் பிரச்னை சோவியத் தேசத்தில் என்றென்றைக்குமாக ஒழித்துக்கட்டப்பட்டுள்ளது.

அக்டோபர் புரட்சியின் சாதனைகளில் தேசியஇனப் பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட்டமை ஒரு விசேஷ இடத்தைப் பெறுகின்றது. முன்னைய ஸாரிஸ்ட் ருஷ்யாவிலிருந்த மக்கள் முதல்தடவையாக, தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் வாய்ப்பினைப் பெற்றனர், சோவியத்யூனியனின் 100க்கும் மேற்பட்ட இனங்கள் தேசியஇனங்கள் ஆகியவற்றின் மத்தியிலான வலுவான ஒருமைப்பாடும், பரஸ்பர உதவியும் 15 சோவியத் குடியரசுகள் அனைத்தினமும் வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகத்தை அளித்தன.

சமூக அமைப்பு வேறுபாடுகளின்றி எல்லா நாடுகளுடனும் நட்புறவுகளைப் பேணுவதே சோவியத்யூனியனின் கொள்கையாகும். அது அனைத்து ஆசிய நாடுகளுடனும் இத்தகைய உறவுகளையே பேணிவருகின்றது. பரஸ்பர கௌரவம், சுயாதிபத்தியத்துக்கு மதிப்பளிப்பது உள்நாட்டுவிவகாரங்களில் தலையீடின்மை ஆகியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பரம், ஒத்துழைப்பு ஆசியாவில் நிலையானதும் உறுதியானதுமான சமாதானத்தினையும் பந்தோபஸ்தினையும் பேணுவதன் பாலான பொதுவான கரிசனை ஏகாதிபத்திய, கலோனியலிஸ இனவாத சக்திகளின் சூழ்ச்சிகளுக்கு எதிரான கூட்டுப்போராட்டம் ஆகியனவே இந் நாடுகளை எம்முடன் ஐக்கியப்படுத்துகின்றன.

தமது சமாதானத்தையும் மந்தோபஸ்தினையும் உத்தரவாதப்படுத்தும் வழிவகைகள் பற்றியும் தமது அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமான வாய்ப்புகளை உருவாக்குவது பற்றியும் ஆசிய மக்கள் எப்பொழுதுமே கரிசனை கொண்டு வந்துள்ளனர் அனைத்து ஆசிய நாடுகளினதும் கூட்டு நடவடிக்கைகள் மூலமே இந்த இலட்சியங்களை எய்த முடியும். இக் கண்டத்தில் சில அபாயகரமான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ள இன்றைய நிலையில் இவை மிக மிக அத்தியாவசியமானவையாகும். முரண்பாடுகள் பல வந்தங்கள், உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத்தலையீடுகள் ஆசியநாடுகளை ஒன்றுகொன்று எதிராக முடுக்கி விடுவதற்கான எத்தனிப்புகள் ஆகியன அகன்று, அவற்றினிடத்தே ஸ்திரமான சமாதானமும் பந்தோபஸ்தும் நிலைபெறவேண்டும் என்ற பிரக்ஞையுணர்வு பெருகிவருகின்றது.

அரசியல், வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு, கல்வி கலாசாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சோவியதயூனியனுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள் வளர்ந்தோங்கி வலுப்பெற்றுவருவதைக் காணும்போது மகிழ்ச்சியாகவுள்ளது.

இந்த எழிலார்ந்த நாட்டின் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அக்டோபர் புரட்சியின் 61-வது ஆண்டுவிழா தருணத்தில் சோவியத் இலங்கை நட்புறவு எமது இரு நாடுகளினதும் மக்களது நலன்களின் பேரில் மேலும் ஆழமும் அகலமும் பெறவேண்டுமென நாம் நம்புகிறோம்

3ம், 4ம் உபடிப்போக்கள்

## தீவுப்பகுதியிலும் கீரிமலையிலும் நிறுவ நடவடிக்கை

### இ. போ. ச. பிராந்தியத் தலைவர் தகவல்

(வண்ணார்பண்ணை)

வடபிரதேசத்தில் நிறுவப்படும் நான்கு உப டிப்போக்களில் மூன்றுவது டிப்போ தீவுப்பகுதியிலும் நான்காவது டிப்போ கீரிமலையிலும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும், இதற்கிடையில் தீவுப்பகுதி பஸ்சேவையில் ஏற்படும் குறைபாடுகள் படிப்படியாக தீர ஏற்பாடுசெய்யப்படும்'' என்று இ. போ. ச. வடபிரதேச தலைவர் திரு. அமரசிங்கம் தெரிவித்தார்.

தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்திற்கும் இ. போ. ச. பிரதேச தலைவருக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின்போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இ. போ. ச. வடபிரதேச அலுவலகத்தில் நடந்த இப் பேச்சுவார்த்தையின் போது, இ. போ. ச. சார்பில் தலைவர் அமரசிங்கம், யாழ். டிப்போ அத்தியட்சகர் திரு. கே. மயில்வாகனம், யாழ். பஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. பாக்கியநாதன், யாழ். டிப்போ நேர அட்டவணை பொறுப்பு உத்தியோகத்தர் திரு. கே சிவபாதம், டிப்போ நிர்வாக முகாமையாளர் திரு. சே. நாகரத்தினம், திரு. கே. தியாகராஜா, ஆகியோரும் தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கத்தின் சார்பில் சங்கத்தலைவர் திரு. பி. ஜே. அலோசியஸ், செயலாளர் திரு. துரைராஜா, செயற்கமிட்டி உறுப்பினர்கள் திரு. எஸ். பாலசிங்கம், திரு கே. நடராசா, திரு. இ. நகுலேசபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது தீவுப்பகுதியின் பஸ் சேவை சம்பந்தமாக இரண்டு மணிநேரம் பலதரப்பட்ட குறைபாடுகள் பற்றி ஆராயப்பட்டன.

தீவுப்பகுதிக்குத் தனியான டிப்போ ஒன்று அவசியம் தேவை என்பதை தாம் உணர்வதாக தெரிவித்த சபையின் தலைவர் மூன்றுவது டிப்போ இங்கு நிறுவ ஆவன செய்வதாகவும், நான்காவது டிப்போ கீரிமலையில் அமைய விருப்பதாகவும் தெரிவித்தார். தற்போதைய குறைகள் விரைவில் தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, சுருவில், செருக்கன் ஆகிய பாதைகளில் ஏற்படும் பஸ்சேவைக் குறைபாடுகளை உடன் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் புங்குடுதீவிலிருந்தும், ஊர்காவற்றுறையிலிருந்தும் வேலணை மத்திய மகாவித்தியாலயம் வரை பாடசாலை பஸ்சேவை நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சொன்னார். (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu telephone: 889, Registered as a Newspaper in SriLanka.

உதைபந்தாட்டம்

## மகாஜன யாழ். இந்து ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் தற்போது நடைபெற்று வரும், பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று நடைபெறவிருந்த தெல்லிப்பளை மகாஜன - யாழ். இந்துக் கல்லூரிகளின் போட்டி பின்போடப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## சில பஸ் சேவைகள் இன்னமும் சீராகவில்லை

(வண்ணார்பண்ணை)

வெள்ளப்பெருக்கால் யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டிருந்த பஸ்சேவைகளில் சில இன்னமும் நடைபெறவில்லை.

அம்பனைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முதல ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினுல் அம்பனை, பன்னுலை, அளவெட்டி முதலான பாதைகள் வெள்ளத்தால் மூடப்பட்டு தடைப்பட்டுள்ளன. இதனுல் 768 இலக்க அளவெட்டி கீரிமலை சேவை தடைப்பட்டு இச் சேவை தெல்லிப்பளை ஊடாக நடை பெறுகிறது

795-ம் இலக்க பன்னுலை பஸ்சேவை தடைப்பட்டுள்ளது. வீதியை குறுக்கறுத்து பாயும் வெள்ளம் இன்னமும் தணியாததால் அளவெட்டி பஸ்பிரயாணிகள் பிரயாணக் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்

### தீவுப்பகுதியில் நெற்பயிர் நாசம்

தீவுப்பகுதியில் மழைவெள்ளம் வயல்களை மூடியநிலையில் இருப்பதால் இப்பகுதியில் நெற்பயிர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மண்டைதிவு, அல்லைப்பிட்டி மண்குப்பான், வேலணை ஆகிய பகுதிகளில் நெற்பயிர்கள் மீளமுடியாத நிலையில் வெள்ளம் இருக்கிறது. (அ)

## விடுதலைகோரி சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாவை சேனதிராஜாவையும் காசி ஆனந்தனையம் விடுதலை செய்யுமாறு கோரி, சிங்களத்திலும், தமிழிலும் கொண்ட பெரிய சுவரொட்டிகள் யாழ். நகரின் முக்கிய பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

இவை எந்தக்கட்சியின் அல்லது இயக்கத்தின் சார்பில் ஒட்டப்பட்டுள்ளன என்பது பற்றி விபரம் சுவரொட்டிகளில் காணப்படவில்லை (செ)

## 300 குடும்பங்க ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

500 ரூபா நஷ்டஈடு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இக் குடும்பங்களுக்கு உணவு வழங்கும் நடவடிக்கையில் சமூக சேவைகள் பகுதியும் சர்வோதய இயக்கமும் ஈடுபட்டுள்ளன.

இங்கு 100 வீடுகள் வசிக்கும் நிலையில் இல்லையென்றும் 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு சுப்பிரமணியம் வித்தியாசாலையிலும் துரைச்சாமி வித்தியாசாலையிலும் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பலஇடங்களையும் அரசாங்க அதிபர் பார்வையிட்டார். (உ)

## மூதூரில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளது எரக்கலம் பகுதியை அடுத்துள்ள இடங்களில் 5 முதல் 6 அடி வெள்ளம் நிற்கிறது.

குடிசை வீடுகள் ஆங்காங்கே விழுந்து சேதமடைந்துள்ளன.

சுமார் 20 ஆயிரம் ஏக்கர் விதைத்த வயல் நிலங்கள் வெள்ளநீரால் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள், கோழிகள் பெருந்தொகையாக மடிந்துள்ளன.

பேக்கரிகளில் நீர்தேங்கியதால் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியானமாமூடைகள் உட்படத் தீன்பண்டங்களும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

திருமலை, மூதூர் மோட்டார் படகுச் சேவை தடைப்பட்டுள்ளது.

இதனுல் மூதூர்மக்கள் மண்ணெண்ணை முதல்கொண்டு உணவுப்பண்டங்கள் கூடவரத்திலாததால் இருட்டில் பசியால் வாடுகின்றனர்

மூதூர்-மட்டுநகர் போக்குவரத்து முற்றுகத்தடைப்பட்டுள்ளது.

தந்திதொலைபேசிச் சேவையும் ஒருவாரமாக முற்றுகத் தடைப்பட்டுள்ளது.

### மின்சாரம்

மின்சாரம் 3 வாரமாக அடிக்கடி தடைப்பட்டுத் தற்போது முற்றுகத் தடையாகியுள்ளது. (அ)

## பவளரசு பிணையில் விடுதலை

சென்னை, நவ 10

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கு எதிராக மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்த திரு பவளரசு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவரை மீண்டும் இம் மாதம் 10ம் திகதி சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜராகமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திரு பவளரசு கடந்தமாதம் 26ம் திகதி 144வது தடையுத்தரவை மீறி, மீனம்பாக்கம் விமானநிலையத்தில் இலங்கை ஜனதிபதிக்கு எதிராக கோஷமெழுப்பி துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தபோது காவல்படையினரால் கைது செய்யப்பட்டார். சிறையில் திரு. பவளரசு பட்டினி இயக்கத்தை ஆரம்பித்ததையடுத்து நீதிபதியின் உத்தரவின்பேரில் சரீரப்பிணையில் அவர் விடுதலையானுர். (செ)

## "பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை"

[நீர்வேலி]

"நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு நாட்டு மக்கள் உதவிபுரியவேண்டும்'' என்று நீர்வேலி மாசிவன் மக்கள் கலை விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். செல்வகுமார் கூறினுர்.

## விவசாய அறிவுப்போட்டி

(வேலணை)

தீவுப் பகுதியில் உள்ள இளம் விவசாயக் கழகங்கள் ஒன்றிணைந்து நடாத்திய விவசாய அறிவுப் போட்டி வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் இருஷிகப் போதனசிரியர் திரு. அ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், வேலணைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து, யாழ் மாவட்ட மேலதிக விவசாய அதிபர் திரு அன்ரன் யோசேப் ஐயா, வேலணைப் பகுதி மிருக வைத்தியர் திரு பி. இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து விவசாயப் புரட்சி முறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக புலவர் ஈழத்து சிவானந்தன் தலைமையில் ''விவசாய உற்பத்தி வாழ்வுக்காக தாழ்விற்கா'' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று நடைபெற்றது.

இதன்பின்னர் விவசாய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகளையும் சான்றிதழ்களையும் எம். பி. வழங்கினுர். (உ)